# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 19 செவ்வாய்க்கிழமை (04-12-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:08


## எது தமிழ் விரோதம்? கேட்கிறது ஈ.பி.டி.பி.!

### வெற்று வார்த்தைகளால் வீரம் பேசுகிறாராம் பாலசிங்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.4

'எது தமிழ் விரோதம்?' என்று கேள்வி எழுப்பியிருக்கின்றது ஈ.பி.டி.பி.

வெற்று வார்த்தைகளால் வீரம் பேசுகின்றார் அன்ரன் பாலசிங்கம் என்றும் அக்கட்சி வர்ணித்திருக்கின்றது.

லண்டனில் கடந்த சனியன்று 'தேசிய நினைவு எழுச்சி நாள் - 2001' நிகழ்வில் ஈ.பி.டி.பியை விமர்சித்து அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த கருத்துகளுக்கு பதிலளிக்கும் விதத்தில் அக்கட்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியை தமிழ் விரோத சக்தி என்று லண்டனில் புலிகளின் பிரமுகர் அன்ரன் பாலசிங்கம் வர்ணித்துள்ளமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஈழத் தமிழ் மக்களுடைய சுதந்திர உரிமைக்கான வரலாற்று போராட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் உருவாக்கம் நல்லதொரு வரவேற்கத்தக்க திருப்பம் எனவும், அதே சமயம் தமிழ் விரோத சக்திகளில் ஈ.பி.டி.பி.தான் முன்னிலையில் இருக்கிறது.

(26ஆம் பக்கம் பார்க்க)

## கள்ள வாக்குப் போடும் பணிக்கு வாகனங்களை வழங்காதீர்கள்!

### மகேஸ்வரன் உருக்கமான வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,டிசெ.4

"நாளை நடைபெறவிருக்கும் தேர்தலின் போது கள்ள வாக்குகளைப் போடுவதற்குத் திட்டமிட்டிருக்கும் ஒரு குறிப்பிட்ட கட்சியின் நடவடிக்கைகளில் உங்களது வாகனங்களை ஈடுபடுத்துவதன் மூலம் தமிழினத்திற்கு துரோகம் இழைக்காதீர்கள்"

- இவ்வாறு யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் மினிபஸ், கார் மற்றும் ஓட்டோ உரிமையாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார் ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

தமிழ் விரோதக்கட்சி ஒன்று வழமைபோல இந்த முறையும் அதிகளவான கள்ள வாக்குகளைப் போட்டு ஆசனங்களைக் கைப்பற்று

(26ஆம் பக்கம் பார்க்க)

**பிந்திய பதிப்பும் இன்று வெளியாகும்!**

**தேர்தல் ஆயத்தங்களை ஒட்டி இன்று உதயனின் பிந்திய பதிப்பு மாலையில் வெளியாகும். அதன் விலை 5 ரூபா. உங்கள் பிரதியைப் பெற உங்கள் முகவருடன் நேரத்துடனேயே ஒழுங்குசெய்து கொள்ளுங்கள்.**

# வாக்களிப்புக்கு அடையாள அட்டையை வலியுறுத்துவதற்கு நீதிமன்றம் தடை!

## ஈ.பி.டி.பி. மனுவின் மீது உத்தரவு

கொழும்பு,டிசெம்பர்4

**பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்குச் செல்லுபவர் தமது அடையாளத்தை நிரூபிப்பதற்கு தேசிய அடையாள அட்டையையோ அல்லது வேறு எந்த விதமான அடையாள அட்டையையோ சமர்ப்பிக்கும்படி கட்டாயப்படுத்த முடியாது என்று தடை உத்தரவு ஒன்றை உயர் நீதிமன்றம் நேற்று வழங்கியது.**

**ஈ.பி.டி.பி. நேற்று தாக்கல் செய்த மனுவின் மீது இந்த உத்தரவு வழங்கப்பட்டதாக அக்கட்சியின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.**

யாழ்.குடாநாட்டில் வாக்களிக்கச் செல்வோர் தமது அடையாள அட்டைகளைச் சமர்ப்பிக்கவேண்டும் என்பதை கட்டாயப்படுத்தும்படி தேர்தல் ஆணையாளரிடம் சிபார்சு செய்யப்போவதாக ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர் என்று யாழ். பத்திரிகையில் வெளியான செய்தியின் அடிப்படையில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாக ஈ.பி.டி.பி. தெரிவித்தது.

யாழ்.மாவட்டத்துக்கு மட்டும் இத்தகைய நடைமுறையை விதிப்பதை ஆட்சேபித்து நேற்று உயர் நீதிமன்றில் ஈ.பி.டி.பி. அடிப்படை உரிமை மனு ஒன்றைத் தாக்கல் செய்தது.

தவிர, உயர் நீதிமன்றத்திலும், மேன்முறையீட்டு நீதிமன்றிலும் வேறு இரு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

தேர்தல் ஆணையாளரும் யாழ். தெரிவத்தாட்சி அலுவலரும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, நீதியரசர்களான சிராணி பண்டாரநாயக்கா, எதிரிசூரிய ஆகியோரைக் கொண்ட நீதிமன்றம் அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரித்து மேற்படி தடை உத்தரவைப் பிறப்பித்தது.

இதனையடுத்து மற்றைய இரு மனுக்களையும் ஈ.பி.டி.பி. வாபஸ் பெற்றது.

(உ)

## ஹர்த்தாலின் போது மிரட்டலில் ஈடுபட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் 17 பேர் மட்டக்களப்பில் நேற்றுக் கைது!

### இருவர் வேட்பாளர்களாம்

மட்டக்களப்பு,டிசெ.4

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று ஈ.பி.டி.பியினர் அழைப்பு விடுத்திருந்த ஹர்த்தாலின் போது, கடைகளைப் பூட்டும்படி வர்த்தகர்களை மிரட்டியதாகக் கூறப்படும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் 17பேரை பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் இருவர் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களாவர்.

இவர்களனைவரும் மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் அப்துல்காதர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சமயம், வேட்பாளர்கள் இருவரையும் 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார். மற்றவர்கள்

(26ஆம் பக்கம் பார்க்க)

**கேட்டு வாங்குங்கள்**

**இன்றைய உதயன் இரண்டு தேர்தல் துண்டுப் பிரசுர இணைப்புகளுடன் 26 பக்கங்களில் வெளிவருகின்றது. பத்திரிகை மடிப்பு வசதி கருதி இரண்டு பிரிவுகளாக உதயன் வெளிவருவதால் இரண்டு பிரிவுகளையும் சேர்த்து வாங்குவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.**

## தீவகப் படுகொலைகள்:

## மதனராஜா, நெப்போலியனை கைதுசெய்ய நீதிமன்றம் ஆணை!

### பிணை அனுமதி ரத்து

யாழ்ப்பாணம்,டிசெ.4

கடந்த 28ஆம் திகதி தீவுப் பகுதியில் தமிழர் கூட்டமைப்பின் பிரமுகர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டது தொடர்பாகக் கடந்த வெள்ளியன்று கைது செய்யப்பட்டு ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் என். மதனராஜா, ஈ.பி.டி.பியின் தீவகப் பொறுப்பாளர் நெப்போலியன் ஆகியோரின் பிணை அனுமதி ரத்துச் செய்யப்பட்டது. இருவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு ஊர்காவற்றுறைப் பொலீஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார் யாழ் நீதிவான் இ.த.விக்னராஜா.

மேற்படி கொலைகள் தொடர்பான மரண விசாரணை விடயம் நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நேற்று நீதிமன்றத்தில் ஆஜரான அரச சட்டத்தரணி கணேசராஜா, இந்த இருவருக்கும் பிணை வழங்கப்படுவதை

(26ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரமான, நீதியான தேர்தலுக்காக வவுனியா நீதிவான் விசேட ஆணை!

வவுனியா,டிசெ.4

நீதியும் நேர்மையுமான தேர்தலை நடத்துவதற்கு - சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்கு - கண்டிப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலீஸாருக்கு, வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் விசேட ஆணை பிறப்பித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் பாடசாலை மாணவர்களே கள்ள வாக்குக்களைப் போடுவதில் முன்னின்றதாகத் தெரியவந்திருப்பதாகவும் -

நாளை நடைபெறவுள்ள தேர்தலில் குற்றச்செயல், முறைகேடு, ஆள் மாறாட்டம் என்பன ஏற்படாதவாறு கண்டிப்பான நடவடிக்கைகளை பொலீஸார் மேற்கொள்ளவேண்டும் என்றும் -

நீதிவான் வலியுறுத்தியுள்ளார்.

சட்டத்தை உருவாக்குபவர்கள் சட்டத்தை மதிக்காவிட்டால் அவர்

(26ஆம் பக்கம் பார்க்க)

### கப்பல் சேவை ரத்து

யாழ்ப்பாணம்,டிசெ.4

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று இடம்பெற இருந்த சிற்றி ஒவ் றிங்கோ கப்பல் சேவை, காலநிலை சீரின்மை காரணமாக நடைபெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் சேவை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று றான் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(ம)




உண்மையாக உழைக்கும் உயர்ந்த இலட்சியம்
நேர்மையும் தியாகமும் நிறைந்த சேவை!
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்
நெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத் தலைவரும்
சிறப்புமிகு கூட்டுறவாளருமான
திரு. சி.சிவமகாராசா

இல.11 X
தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளருக்கே
உங்கள் வாக்கை அளியுங்கள்!
ஞாபகமிருக்கட்டும் 05.12.2001 பொதுத் தேர்தல்

# மக்கள் மனப்பூர்வமாகப் பங்கேற்க வேண்டும்

ஈழப்போராட்டம் ஒரு புதிய பரிமாணம் எடுத்தபோது இளைஞர்கள் ஆயுதம் தாங்குவது அவசியம் என்று நினைத்தவர்தான் அமிர்தலிங்கம். அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, ஆயுதம் பெறுவதற்காக நாங்கள் இந்தியாவிடம் எவ்வளவு வாதாடி இருப்போம்....? ஆனால் இன்றைக்கு ஆயுதம் ஈழப் போர்முனையிலேயே கிடைக்கிறது. காரணம், தமிழர் விடுதலைப் போராட்டம் ஆயுத ஏஜண்டுகளின் போராட்டமாக மாறிப் போய்விட்டதுதான்! இந்த ஆயுத ஏஜெண்டுகளுக்குப் போர் நடந்து கொண்டிருந்தால்தான் வியாபாரம் நடக்கும். அதனால் அமைதி ஏற்பட அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள்.



பதினைந்து, இருபது ஆண்டுகளாக எங்கள் மக்கள் உழைக்கவில்லை; படிக்கவில்லை. மரத்துப்போன வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

எங்கள் பையன்கள் அறிவு வருவதற்கு முன்பே ஆயுதம் ஏந்திக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களைக் கண்டு மக்கள் பயப்படுகிறார்கள்; பணம் கொடுக்கிறார்கள். அதனால் துப்பாக்கிதான் அதிகாரத்தை வழங்குகிறது என்று மனோ ரீதியான முடிவுக்கு எங்கள் பையன்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

அறிவுபூர்வமான தலைவர்களை அழிப்பது ஓர் இயக்கத்தை சிதைக்க முதல்வழி. அதன் விளைவுதான் அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள் கொல்லப்பட்டது. இதை யார் தூண்டுகிறார்கள்?

## மு.சிவசிதம்பரம்

(தலைவர், த.வி.கூ.)

இந்தியாவின் உளவு நிறுவனமான 'றோ'(RAW) அதிகாரி உன்னிகிருஷ்ணனைப் பிடித்து இந்தியாவின் ராணுவ ரகசியங்களைப் பெற்றவர்கள் அமெரிக்கர்கள். அவர் களுக்கு இந்தியாவுக்கு ஆதரவான சக்திகள் வேறு நாட்டில் இருப்பது என்றைக்கும் பிடிப்பதில்லை. அதனால் இந் தியாவின் நல்லுறவுக்காகப் பாடுபட்டவர்களை பகை முடிக்கிறார்கள். அதுவும், எங்கள் பையன்களைக் கொண்டே!

எவ்வளவு இழப்புகள் எங்களுக்கு? இதுவரை அரவணைத்த தமிழ்மக்கள் எங்களை சந்தேகக்கண் கொண்டு பார்க்கிறார்கள்! எல்லாவிதத்திலும் ஈழத்தமிழர்களுக்காக உதவிய வெளிநாட்டுத் தமிழர்கள் விரக்தி அடைந்து ஒதுங்கிக் கொண்டிருக்கிறார்கள். தமிழக முதல்வர், 'இவர்கள் தொல்லையே வேண்டாம்' என்று ஒதுங்குகின்றார். அகதிகளாக வந்த மக்களை வெளிமாநிலத்துக்கு அனுப்புகிறார்... இனி, என்ன நடக்கும் என்று சொல்ல முடியாத சூழ்நிலை. தினமும் ஒரு திருப்பம்.

மக்கள் மனப்பூர்வமாகப் பங்கேற்று நடத்தும் போராட்டம் வெல்லும்; துப்பாக்கிகள் அமைதியைக் கொண்டுவராது. அது போராளிகளுக்குப் புரியும்வரை பொறுத்திருப்பதுதான் ஈழத்திலுள்ள ஜனநாயக வாதிகளுக்கு உள்ள ஒரே வழி! என்று நம்பிக்கையோடு சொல்கிறார் அந்த எம்.பி.

சந்திப்பு :- திலீபன்.

**த.வி.கூ. செயலதிபர் அ.அமிர்தலிங்கம் மற்றும் வெ.யோகேஸ்வரன் ஆகியோர் கொல்லப்பட்ட சம்பவத்திற்குப் பின்னர் த.வி.கூ. தலைவர் மு.சிவசிதம்பரம் சென்னையிலிருந்து வெளிவரும் "இதயம்" சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியிலிருந்து இது தரப்படுகிறது.**

**துப்பாக்கிகள் அமைதியைக்கொண்டுவராது; அமைதியைக் கொண்டுவரப்பாடுபடும் போராளிகளுக்கு வாக்களியுங்கள்.**


ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி

(ஈ.பி.டி.பி.)




X

# விழிமூடிப் போனாலும் வழிகாட்டும் ஒளிச்சுடர்கள்!


மு.ஆலாலசுந்தரம்

1986இல்
நாடாளுமன்றப் பதவிகள்
துறந்தீர்!
பரிதவித்து நின்ற
மக்களின் மத்தியில்
நிராயுதபாணிகளாக
நம் மண்ணில்
நிமிர்ந்து நின்றீர்கள்!
விடவில்லை!!


வி.தர்மலிங்கம்



அ.அமிர்தலிங்கம்


1989இல்
போராளிகளோடு பேசிச்
சமாதானம்
பேண நினைத்தீர்கள்!
விடவில்லை!!


வெ.யோகேஸ்வரன்

1999இல்
கோரமாய்ச் சிதைந்த
மண்ணில்
மக்கள் வாழ்வைச்
செழுமைப்படுத்த
ஆர்வமாய்ப் பாடுபட்டீர்!
அதனையும்
விடவில்லை!!


சரோஜினி யோகேஸ்வரன்


பொன்.சிவபாலன்


பொன்.மதிமுகராசா

கடந்தகாலச் சம்பவங்களில் பாடம் படிக்க மறந்தோரால் - வழி நடத்தமுடியாது
என்பதை உணர்வீர்! சிந்திய குருதியினால் பாடம் புகட்டிய முந்திய தலைவர்களுக்கு

## எம் கண்ணீர் அஞ்சலிகள்!!

(95526)

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
## (ஈ.பி.டி.பி.)

## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001

கோபாலபிள்ளை
ஜெயேந்திரா



ஐ.தே.கட்சி

இல. 2 இல. 4

தி.மகேஸ்வரன்



நயினாதீவு மக்களின் அன்றாடப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கும் - நயினாதீவு மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கும் - வாக்குகளை அளிப்போம்.

(95518) - நயினாதீவு வாழ்.மக்கள்.



## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

அச்சுவேலி - ஆவரங்கால் - புத்தூர் வர்த்தக சங்கம்.

எமது உறுப்பினர்களுக்கு 1995ஆம் ஆண்டு நஷ்டஈடாக ரூபா 43லட்சம் ஒதுக்கீடு செய்ததுடன் முதற் கட்டமாக 21 லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை உடன் தந்துதவிய பெருந்தகைகளான,



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், வடக்கு - கிழக்கு தமிழ் விவகார, இந்து சமய கலாசார, வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி மாண்புமிகு அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும் -

வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர்
உயர்திரு.

**பூ.குணசிங்கம்**

அவர்களையும் -





கோப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளரும், வலி.கிழக்கு பிரதேச சபை உபதலைவருமான

உயர்திரு. **யூ.எல்.ஏ.ரவி**

அவர்களையும் -

***மனம் நிறைந்த நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.***

- அச்சுவேலி - ஆவரங்கால் - புத்தூர் வர்த்தக சங்கம்.

(95602)



## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்
## யாழ்.மாவட்டம் 05-12-2001
## யாழ்.மாவட்ட தமிழ் வாக்காளர்களே!

உங்கள் தனித்துவம் காத்திட

**நடராசா ராஜசூரியர்**

ஆகிய நான் யாழ்.மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடுகின்றேன். யானைச் சின்னத்திற்கு புள்ளடியிட்டு எனது வெற்றி இலக்கமான 5 இற்கும் புள்ளடியிட்டு என்னை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**ந.ராஜசூரியர்**



**ந.ராஜசூரியர்**

கட்டடக் கலைஞர்
(ARCHITECT)
பாண்டியன்தாழ்வு நடராஜா
அவர்களின் மகனும்.
வண்ணார்பண்ணை
வேருவலை
பொன்னுத்துரை
அவர்களின் மருமகனும்.

5

எனது இல. 5

(95523)



# தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு
# அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்



தனிப்பெருந் தலைவர்
**ஜீ.ஜீ.பொன்னம்பலம்**



வேங்கையின் மைந்தன்
**கஜேந்திரகுமார்**



தியாகவேங்கை
**குமார் பொன்னம்பலம்**

தமிழர் தனித்துவம் காத்த தனிப்பெருந் தமிழ்த் தலைவர் ஜீ.ஜீயின் பேரன், உன்னதமான உயிரை உங்களுக்காகத் தியாகம் செய்த ஒப்பரிய தலைவர் மாமனிதர் குமாரின் ஒரே மைந்தன் இளைய தலைமுறையினரின் இனிய தலைவன்

## கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்

அவர்களை ஆதரிப்போம்.

தமிழர் தலைநிமிர்வர் இவரால். தமிழர் வாழ்வு சிறக்கும் இவரால். பழகுதற்கு மிகவும் இனிமையானவர். பண்பானவர். அழகிய ஆங்கிலப் பேச்சு வன்மை உடையவர். எவருக்கும் அஞ்சாது நீதியை எடுத்துரைக்கவல்லவர். எங்கும் செல்லுவார். எதிலும் வெல்லுவார். தலைமை தாங்கும் தன்மையும். வாக்கு வசீகரமும். நுண்ணறிவும். நெஞ்சில் நேர்மையும். அச்சமற்ற தன்மையும். அயராத உழைப்பும் இவரின் பரம்பரைச் சொத்துக்கள். பெரும்புகழ் பெற்ற பேரனைப் போலத். தந்தையைப்போலத் தமிழர் தன்மான வாழ்வுக்காக. அவர்கள் இல்லாத நிலையில் உழைக்க முன்வந்துள்ள இவரை. இந்த இளம் வீரரை ஆதரியுங்கள்.

***கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்*** இல. 8

எல்.எல்.பி.சிறப்பு லண்டன். பரிஸ்ரர். (லிங்கன்ஸ் இன்) லண்டன். சட்டத்தரணி - இலங்கை.

இல. 8 8

சமாதானம். சுயநிர்ணய உரிமை. சுதந்திரம் இவற்றை ஆதரித்து வாக்களிப்போம்.
தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட்டு விட்டன. தமிழினம் ஒன்றுபட்டுவிட்டது.
தமிழினத்தை இனி அசைக்க முடியாது எனத் தமிழினப் பகைவர்களுக்கு உணர்த்துவோம்.
சிங்களக் கட்சிகளையும் அவர்களது ஆதரவாளர்களையும் தோற்கடிப்போம்.
'வாழ்க தமிழ்'

தமிழர் விடுதலைக் கூட்டணி

(95522)

- மூத்த தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்.

# உதயன்

## புலிகள் விவகாரமே முக்கிய இடத்தில்!

இலங்கையின் பன்னிரண்டாவது பொதுத் தேர்தல் நாளை நடைபெறுகின்றது.

இலங்கையின் சரித்திரத்தில் என்றுமில்லாதவாறு அதிகளவு வன்செயல்களுடனும் குழப்பங்களுக்கு மத்தியிலும் நடைபெறும் பொதுத் தேர்தல் இது என்று வர்ணிக்கப்படுகின்றது.

முந்திய தேர்தல்கள் போலல்லாது, இந்தத் தேர்தலில் வேறு ஓர் அச்சமும் உள்ளது.

பொதுத் தேர்தலின் பின்னரும் அதிகளவு குழப்பங்களையும் வன்செயல்களையும் இந்தத் தேர்தலின்போதுதான் அவதானிகள் அதிகம் எதிர்பார்க்கின்றார்கள்.

இந்தத் தேர்தலினால் ஆட்சி மாறக்கூடும் என்ற கணிசமான எதிர்பார்ப்பு தென்னிலங்கையில் உண்டு. ஆட்சி மாறினாலும் அதிகாரம் மாறாது என்ற நிலைப்பாடும் உள்ளது. அத்தகைய நிலைமை வன்செயல்களுக்கு — மோதல்களுக்கு — நிச்சயம் வித்திடும் என்ற அச்சமும் பரவலாக நிலவுகின்றது.

இந்த நிலையில்தான் ஆள்மாறாட்டங்களையும், வன்முறைகளையும் தவிர்த்து, நீதியான — உண்மையான — ஜனநாயக வழியிலான — தேர்தல் ஒன்று நடைபெற வழி சமைப்போம் என்று நம் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றார் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம்.

வன்முறைகளற்ற — நீதியான. ஜனநாயகத் தேர்தல் ஒன்று நடைபெறவும், அதன் வழி தமிழ் மக்களின் நீண்டகால துன்ப, துயரங்கள் நீங்கி, நீதியோடு கூடிய நிம்மதியான, சுதந்திர வாழ்வு கிடைக்கவும் அவர் இறைவனைப் பிரார்த்தித்திருக்கின்றார்.

யாழ். குடாநாட்டு மக்களுக்கு நாளைய தேர்தல் மிக முக்கியமான ஒன்றாக அமைகின்றது.

நான்கு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஓரணியில் நிற்கின்றன. விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்வது உட்பட அதை ஒட்டிய விடயங்களை பொதுக் கோரிக்கையாக முன்வைத்து களத்தில் இறங்கியிருக்கின்றன தமிழ்க் கட்சிகள் நான்கும்.

பெரும்பான்மைக் கட்சியின் சார்பில் யாழ். தேர்தலில் மீண்டும் களத்தில் குதித்திருக்கும் தி. மகேஸ்வரன் கூட விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதியாகப் பிரகடனப்படுத்துவதையே வலியுறுத்துகின்றார்.

ஏனைய சிலகட்சிகளும் இதே நிலைப்பாட்டைத்தான் எடுத்துள்ளன.

எனினும் —

ஈ.பி.டி.பி யும், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர்) அணியும் இந்த நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆக இத்தேர்தலில், ஒரு புறத்தில் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள வலியுறுத்தும் அணியும் —

மறுபுறத்தில் அதை நிராகரிக்கும் அணியும் — உள்ளன.

எனவே —

யாழ். குடாநாட்டு மக்கள் நாளைய தேர்தலில் விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதியாக ஏற்பதா அல்லது இல்லையா என்ற முக்கிய கேள்விக்குத்தான் பதிலளிக்கப்போகின்றார்கள்.

எனவே, இது விடயத்தில் —

யாழ். ஆயர் கூறுவது போல சுபீட்சமான — சுதந்திரமான — எதிர்காலத்தை மனதிற்கொண்டு, இந்தக் கேள்விக்கு சரியான பதிலை மனதில் நிறுத்தி, குடாநாட்டு மக்கள் வாக்களிக்க வேண்டும்.

# எமது மக்களைப் பேரினவாத அரசுகளுக்கு விற்றுப் பிழைக்கும் சக்திகளை நிராகரிப்போம்

## நல்லூரில் நடந்த இறுதிப் பிரசாரக் கூட்டத்தில் மாவை

யாழ்ப்பாணம், டிசெ. 4

எமது சமூகத்தில் பலவீனப்பட்ட மக்களைச் சந்தையில் போட்டு வியாபாரப் பண்டங்களாக பேரினவாத அரசுகளுக்கு விற்றுப்பிழைக்கும். சக்திகளை இனங்கண்டு அவர்களை நிராகரிக்க வேண்டும்.

தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பின் வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா நேற்றுமுன்தினம் நல்லூரில் நடந்த இறுதிப் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்.

மாவை தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

எனது நாற்பது வருடகால அரசியல் வாழ்க்கையில் இலங்கை அரசின் காவல் துறையினராலும், இராணுவத்தினராலும் பதினொரு தடவைகள் கைது செய்யப்பட்டு கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகள் பொலிஸ் காவல் நிலையங்களிலும் பல்வேறு சிறைக்கூடங்களிலும் அடைக்கப்பட்டுள்ளேன்.

காவல் நிலையங்களிலும், நான்காவது மாடியிலும், சிறைச்சாலைகளிலும், இராணுவ முகாம்களிலும் கொடூரமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளேன். ஆனையிறவு இராணுவ முகாமில் நான் செத்து விட்டேன் என்று என்னைத் தூக்கி வீசிவிட்டுப் போனார்கள் ஆனால் மீண்டும். உயிருடன் உங்களிடம் வந்திருக்கிறேன்.

### ஊர்காவற்றுறைக்கு சென்ற வேளையில்...!

தந்தை செல்வாவின் வழியின் வந்த நாங்கள் சென்ற 28 ஆம் திகதி ஊர்காவற்றுறைக்கு — தமிழர் கூட்டமைப்புக்காக வாக்குகள் கேட்பதற்காக. எமது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுவதற்காகச் சென்று கொண்டிருந்தோம்.

என்னுடன் எமது அணியின் வேட்பாளர்கள் எம். கே. சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன், ரவிராஜ் ஆகியோரும் எமது ஆதரவாளர்களும் வந்திருந்தனர்.

ஊர்காவற்றுறைப் பட்டின எல்லையை நாம் அணுகிய போது ரி.56 ரகத் துப்பாக்கிகளால் சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதை நான் அவதானித்தேன். எங்களுடைய வாகன அணி இந்தக்கும்பலால் தடுத்து நிறுத்தப்பட்டது. வாகனங்கள் அடித்து நொறுக்க[illegible]டன. முன்னணியிற் செ[illegible] தம்பி சிவாஜிலிங்கம், பே[illegible]லம், கணேஷ், சிவராசா, [illegible]ரைமணி, கமல்ஸ்ரோன் ஆகியோர் வாகனங்களிலிருந்து இழுத்தெடுக்கப்பட்டனர்; பொல்லுகளால் அடிக்கப்பட்டனர்; வாளால் வெட்டப்பட்டனர்; இரும்புக் கம்பிகளால் தாக்கப்பட்டனர்; துப்பாக்கியால் சுடப்பட்டனர். இதனால் பெறுமதிமிக்க இரு உயிர்களைப் பறிகொடுத்துள்ளோம். தம்பி சிவாஜிலிங்கம் மருத்துவமனையில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்.

### கொடியவர்களின் கொடூரம்

அடுத்து நான் சென்ற கார் அடித்து நொறுக்கப்பட்டது. துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. சிங்களக் காவற்துறையினரும், இராணுவத்தினரும் சிறைச்சாலைகளிற்கூடச் செய்யத் துணியாத அளவுக்கு எங்கள் மண்ணில் ஈ.பி.டி.பி. கட்சியினரால் இரும்புக்கம்பிகளாலும், இரும்புச்சங்கிலிகளாலும் நான் தாக்கப்பட்டேன். என்தலை பிளந்தது. இரண்டு கைகளும் உடைக்கப்பட்டன. இரத்தம் பெருகியது.

இத்தருணத்தில் எனது மெய்ப்பாதுகாவலர்களை எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டேன். இதனால் இப்பாவிகளால் நாம்எல்லோரும் அழிக்கப்படுவதைத் தவிர்த்துக் கொண்டோம். எனது மெய்ப்பாதுகாவலர்கள் இருவர் என்னைப் பாதுகாப்பதற்கு முயன்றபோது அவர்கள் இருவரும் இக்கொடியவர்களால் தாக்கப்பட்டார்கள்.

### தீவகமக்கள் மீது பழிபோடுகிறார் டக்ளஸ்

இத்தகைய அநாகரிகமான காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு, எங்கள் ஜனநாயகக் கடமையைத் தடுத்து நிறுத்தியமைக்கான முழுப் பொறுப்பையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், சந்திரிகா குமாரதுங்காவின் அமைச்சரவையும்தான் ஏற்கவேண்டும். டக்ளஸ் தேவானந்தா தமக்கும் இந்தச் சம்பவத்திற்கும் எதுவித தொடர்புமில்லை என்றும் — அப்பாவிகளான தீவக மக்களே இதனைச் செய்தார்கள் என்றும் — அவர்கள் மீது குற்றம் சுமத்துவது அப்பட்டமான பொய்யாகும். இந்த அநாகரிகச் செயலிலிருந்து தாம் தப்பித்துக்கொள்ளுவதற்காக அந்த அப்பாவி மக்களை மட்டுமன்றி இச்சம்பவத்திற்குப் பொறுப்பான ஆயுதந்தாங்கிய தனது கட்சி உறுப்பினர்களையும் காட்டிக் கொடுத்துள்ளார்.

இச்சம்பவத்திற்கு எதிராக நடத்தப்பட்ட ஹர்த்தாலுக்குத் தமது ஆதரவையும் தெரிவிப்பதற்காக டக்ளஸ் சொல்லுவது, அவரது மோசடித்தனத்தை வெளிப்படுத்துவதாகவே உள்ளது. இந்த உண்மைகளை உங்களுக்குச் சொல்லி வைப்பதற்காகவே நான் இன்று மேடைக்கு வந்துள்ளேன்.

### டக்ளஸின் பகற்கனவு

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசித்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும் என்று ஒன்றுபட்டு வற்புறுத்தி நிற்கும் வேளையில் அர்த்தமற்ற வீண் புரளிகளைக் கட்டவிழ்த்து விட்டுத் தமிழ் மக்களை ஏமாற்றலாம் என டக்ளஸ்தேவானந்தா நினைப்பதுவெறும் பகற்கனவாகும்.

உதயன் பத்திரிகையில் வெளிவந்த ஈ.பி.டி.பி விளம்பரத்தில் மறைந்த நமது தலைவர்களான திருவாளர்கள் அமிர்தலிங்கம், தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் போன்றோரது படங்களை எல்லாம் வெளியிட்டுத் தமது வியாபாரத்திற்காக அவர்களையும் பயன்படுத்த முயற்சித்துள்ளார்.

எங்களைப்பொறுத்தவரையில் எந்த ஒரு கொலையையும் நாங்கள் நியாயப்படுத்தவில்லை. சகோதரக் கொலைகள் நிறுத்தப்படல் வேண்டும் என்று எமது கூட்டமைப்பில் இணைந்துள்ள கட்சிகளிடமும், சகல தரப்பினரிடமும் ஏற்கனவே கேட்டுக்கொண்டுள்ளோம். நாம் இன்று எமது பொது எதிரியான பேரினவாதத்திற்கும், அதனை நடைமுறைப்படுத்துகின்ற அரசாங்கத்திற்கும், அதன் இராணுவத்திற்கும் எதிராகவே ஒன்றுபட்டு நிற்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

### பேரினவாதத்துக்கு மக்களை அடிபணிய விடமாட்டோம்

எம்மிடம் கருத்து வேறுபாடுகளோ அன்றிச் சகோதரக் கொலைகளோ இடம் பெற்றுவிட்டன என்பதற்காக நாம் எவ்விதத்திலும் சிங்களப் பேரினவாதத்திற்கு எம் மக்களை அடிபணிய விடமாட்டோம். எம் தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் நாம் இன்று ஒன்றுபட்டு நிற்கின்றோம்.

தந்தை செல்வா அவர்களால் தொடக்கி வைக்கப்பட்ட ஐம்பது ஆண்டுகால இனவிடுதலைப் போராட்டத்தை இன்று உலகில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளைப் பயன்படுத்திக்கொண்டு தமிழீழவிடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று முத்திரை இட்டு அடக்கி ஒடுக்குவதற்குப் பேரினவாத அரசின் தலைவி ஜனாதிபதி முயற்சிப்பதற்கு எதிராக அனைத்துச் சக்திகளும் ஒன்றுபட்டுப் போராடுவதற்காகத்தான் நாம் இன்று ஒரே அணியில் ஒன்றுபட்டு நிற்கின்றோம்.

### தற்போதுபோராடி வருபவர்கள் புலிகளே

தமிழினத்தின் விடுதலைக்காக ஆயுதமேந்திய சக்திகளில் இற்றைவரைக்கும் சரணடையாது ஒரே இலட்சியத்திற்காகத்; தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருப்பவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன விடுதலைக்கான சந்தர்ப்பம் கூடிவருகின்ற நேரத்தில் — தமிழ் மக்கள் ஒரே அணியில் திரண்டு வருகின்ற நேரத்தில் — எங்கள் சமூகத்தில் பலவீனப்பட்ட மக்களைச் சந்தையில் போட்டு விற்கும் வியாபாரப் பண்டங்களாகப் பேரினவாத அரசுகளுக்கு விற்றுப் பிழைக்கும் டக்ளஸ் தேவானந்தாவையும், ஈ.பி.டி.பி. கட்சியையும், மக்கள் இனங்கண்டு தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தி இவர்களை நிராகரிக்க வேண்டும் என்று எம் மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே எம் தமிழ்த் தேசமக்கள் ஒன்றுதிரண்டு உங்கள் விடிவுக்காக — தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காக — உதயசூரியன் சின்னத்திற்கே வாக்களித்து, எங்கள் அணியை வெற்றிபெறச் செய்தல் வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறேன் — இவ்வாறு அவர் கூறினார்.

### சி.வீ.கே. சிவஞானம்

தென்னிலங்கையின் சில முக்கிய அரசியல்வாதிகளும், ஊடகங்களும் நான்குதமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு பற்றியும், விடுதலைப் புலிகள் பற்றியும் விஷமத்தனமான பிரசாரத்தை மேற்கொள்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இதில் ஒன்று விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்பாதவர்கள் என்பதாகும். இது மிகவும் தவறான கருத்தாகும். 1987 இல் இந்திய இராணுவத்துடன் யுத்தத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்தபோது கூட யுத்த நிறுத்தத்துக்கு நிபந்தனையற்ற பேச்சுக்குத் தாம் தயார் எனத் தெரிவித்த கடிதத்தின் பிரதியை நானே இந்தியத் தரப்புக்குக் கையளித்தேன்.

1991 இல் நாடாளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேசிய போதும் விடுதலைப் புலிகள் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயாராகவிருப்பதையே — அவருக்குத்தெரியப்படுத்தினேன்.

இது மட்டுமன்றி, கடந்த 10 வருடத்திற்கு மேலாகத் தாம் நிகழ்த்திய மாவீரர் தின உரைகளில் சமாதானத்திற்கான கதவுகள் திறந்துவைக்கப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் கூறிவந்துள்ளார். இதையே கடந்த 27 ஆம் திகதிய தமது உரையிலும் வலியுறுத்தியுள்ளார். உண்மையில் தொடர்ச்சியாகப் பதவிக்கு வந்த அரசுகளே சமாதானத்தை விரும்பவில்லை. விடுதலைப் புலிகள் அல்ல — என்றார்.

### தங்கவேல் உரை

வேட்பாளரான வி.க. தங்கவேல் தமது உரையில் —

கடந்த சில தினங்களில் திக்கம்வடிசாலையில் இருந்து சுமார் 50 ஆயிரம் போத்தல் சாராயம் ஈ.பி.டி.பியினரால் எடுத்துவரப்பட்டு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளன. இது மக்களை மயக்கியேனும் நாடாளுமன்றத்திற்குச் சென்றுவிட வேண்டும் என்ற நப்பாசையிலேயே கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கு எம்மக்கள் ஒருபோதும் இடங்கொடுக்கப்போவதில்லை.

கோயில்கட்டுவோம், பணம் தருவோம் என்று நாம் கூறவில்லை. தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளை விற்று இவற்றைப் பெறுவதற்கு நாம் தயார் இல்லை. மேலும் நாம் ஆயுதம் ஏந்துபவர்களும் அல்லர். அகிம்சை வழியில் எம் மக்களின் விடிவுக்காக உழைப்பவர்களே நாம். பல அரச உத்தியோகத்தர்கள் 'மதில் மேல் பூனை போல்' இருக்கின்றார்கள். இன்னும் சிலர் பயந்து கொண்டும் இருக்கின்றார்கள். இந்த மண்ணில் சீரான முறையில் என்னதான் நடக்கிறது? எல்லாவற்றிலும் அராஜகங்களே இடம்பெற்று வருகின்றன — என்றார்.

இந்தக் கூட்டத்தில் வி. ஆனந்தசங்கரி, என். ரவிராஜ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அ. விநாயகமூர்த்தி, சுரேஷ் பிரேமச்சந்திரன், க. சந்திரராசா, சி. சிவமகாராசா உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர். (க-86-17)

### நாளை

கார்த்திகை 20

புதன்கிழமை

திதி: பஞ்சமி

முன் இரவு 8.30 வரை

நட்சத்திரம்: பூசம்

பிற்பகல் 3.44 வரை

சுபநேரம்: 4.46—6.16

ராகுகாலம்: 12.16—1.46

### உதயவாக்கு

புகழற்ற வாழ்க்கையை விட மதிப்புள்ள மரணமே சிறந்ததாகும்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பீடத்தின் விவசாய எந்திரவியல் துறைத் தலைவர்

**எந்திரி திரு. இ. விஜயரட்னம்**

அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி இராமசாமி பவளம்

அவர்களின் மறைவினால் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— **விவசாயபீட மாணவர் ஒன்றியம்**

யாழ். பல்கலைக்கழகம். (95608)

---

தென்மராட்சி மேற்கு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்க
எல்லைக்குட்பட்டவர்களுக்கு

## நிவாரண விநியோகம் சம்பந்தமான அறிவிப்பு

கார்த்திகை மாதத்துக்குரிய 'உ' அட்டைக்குரிய 2ஆம் கட்ட நிவாரணம் எமது சங்க எல்லைக்குட்பட்டவர்களுக்குக் கீழ்க் குறிப்பிட்ட கிளையில் செவ்வாய்க்கிழமை 4-12-2001 தொடக்கம் 7-12-2001 க்குள் விநியோகம் முடிவுறுத்தப்படும்

01. வடமராட்சியிலிருப்பவர்களுக்கு — ஆவரங்கால் கிளையில் நிவாரணம் விநியோகிக்கப்படும்.
02. வலிகாமத்திலிருப்பவர்களுக்கு — கோண்டாவில் சந்தியிலுள்ள கிளையில் விநியோகிக்கப்படும்.
03. கைதடியிலிருப்பவர்களுக்கு — கைதடி மத்தியில் விசேடமாகத் திறக்கப்பட்ட கிளையில் விநியோகிக்கப்படும்.

- **தலைவர்**

மானிப்பாய் வீதி,
கைதடி. (சி/19639)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தம்பிஐயா செல்லம்மா

இளவாலையைப் பிறப்பிடமாகவும் 28/21 மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தம்பிஐயா செல்லம்மா நேற்று (3-12-2001) திங்கட்கிழமை கல்கிசையில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா அவர்களின் மனைவியும் செல்வராசா, குமாரதாசன், ஆனந்தராசா, நந்தகுமார், சிவகுமார், உதயா ஆகியோரின் அன்புத் தாயாரும் ரேணுகா, ராகினி, கேமா ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:–
**த. குமாரதாசன்** (மகன்)
(இன் கல்வி நிறுவனம், திருநெல்வேலி)
**சி. கந்தையா**
(திருநெல்வேலி)

21/1, Torrance Avenue,
Mount Lavinia.
T.P. 077-360554 (95616)

## சிவசாமி சண்முகலிங்கம்

யாழ்ப்பாணம், கொட்டடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசாமி சண்முகலிங்கம் (காந்தி மணிக்குரல் விளம்பர சேவை உரிமையாளர் - மேஜர் ஷன்) (03-12-2001) நேற்று திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசாமி–சுபத்திரையின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை–பூங்காவனத்தின் மருமகனும், ஆஷாதேவியின் (இந்திரா) அன்புக்கணவரும், விஜயபாரதி (கனடா), சந்திரமோகன் (ஷன் ஒடியோ வீடியோ, உரிமையாளர்) மணிவண்ணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மலிங்கம் (கனடா) அவர்களின் மாமனாரும் ஷாமினி, வினுஷா ஆகியோரின் அன்புப்பேரனும் நாகராஜா, தர்மலிங்கம் (செல்வம் ஜேர்மனி), காலஞ்சென்ற பரமேஸ்வரி, மகேந்திரநாதன் (இந்தியா) சற்குணமூர்த்தி (யாழ்ப்பாணம்), புவனேஸ்வரி (இந்தியா), ஜெகதீஸ்வரி (கௌரி), கணேசலிங்கம் (டென்மார்க்), சர்வேஸ்வரி, காலஞ்சென்ற நடேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கனகரெட்ணம், வைத்திய கலாநிதி இராஜதுரை, தியாகராஜா, சந்திரன், பரமேஸ்வரி, சரோஜினிதேவி, லீலாவதி, ருக்மணி, பத்மாவதி, கருணாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவரெட்ணம் (முன்னாள் உறுப்பினர் மா. ந. சபை) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (05-12-2001) நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு மேபில்ட் வீதியில் நடைபெற்று பூதவுடல் மாதம்பிட்டிய பொது மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
**சந்திரமோகன்**
(மகன்)

T. P. 077-788534
077-364241

(சி/19638)

---

நல்லூர்
பிரதேச சபை

## இலவச தென்னங்கன்று விநியோகம்

நல்லூர் தொகுதி வாழ் மக்களுக்கு ஓர் அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையால் 4-12-2001 ஆம் திகதியன்று 3 வருடத்தில் காய்க்கும் கட்டை இனமும், உயர்ந்த இனமும் கலந்த தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட உள்ளதால் குடும்ப அட்டையுடன் வந்து நல்லூர் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

- துரை. தவராஜா J.P.
உப-தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

தலைமை அலுவலகம்,
நல்லூர் பிரதேச சபை.
03-12-2001.

(சி/19641)

---

## மாற்றி எடுத்தோர் தொடர்புகொள்க!

கடந்த 29-11-2001 வியாழனன்று 11/1, றக்கா வீதியிலுள்ள நியூ அம்பாள் எலக்ரோன் & வேக்சொப் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த நாகராசா அஜித்ராஜ் என்பவருடைய சைக்கிளை அங்கு வந்த வேறு நபரொருவர் தவறுதலாக மாற்றி எடுத்துச் சென்றுவிட்டார். அவ்வாறு எடுத்துச்சென்றவர் தயவுசெய்து மேற்காணும் முகவரியில் உடன்தொடர்பு கொண்டு வந்து தமது சைக்கிளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**நாகராசா அஜித்ராஜ்**
[95599]

---

மரண
அறிவித்தல்

## வேலாயுதர் சபாரத்தினம்

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும்கொண்ட வேலாயுதர் சபாரத்தினம் (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) நேற்று திங்கட்கிழமை மாலை காலமானார்.

அன்னார் தெய்வநாயகியின் அன்புக் கணவரும், சபாநாயகி (லண்டன்), சண்முகநாதன் (லண்டன்), காலஞ்சென்ற இராஜநாதன், விமலநாயகி (துணுக்காய்), யோகநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகலிங்கம் (லண்டன்), கமலாதேவி (லண்டன்) திரவியநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிஷாந்தி, சாம்பவி, சங்கரி, சாருஜா, பானுஜா, க்ஜவதனன், பிரணவச்செல்வி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக விளான் வெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ச. தெய்வநாயகி**
(மனைவி)

வல்லை வீதி,
சங்கானை. (சி/19644)

---

# இரத்ததான முகாம் இன்று

சுன்னாகம் கதிரைமலை சிவன் வீதியில் உள்ள சக்தி கல்வி நிலையத்தில் இன்று செவ்வாய்க்கிழமை இரத்ததான முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் இந்த இரத்ததான முகாமில் இரத்ததானம் செய்ய விரும்புபவர்கள் உணவு உட்கொண்டுவிட்டு வருமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்தத்துக்கு நிலவும் தட்டுப்பாட்டைப் போக்கவே இந்த இரத்ததான முகாம் நடைபெறுகிறது. (ஓ)

---

# மரண அறிவித்தல்கள்

## குமாரவேலு கனகசபை

(உதவியாளர், புனித தீர்த்தம் - வில்லூன்றி)

மன்னாரைப் பிறப்பிடமாகவும் யாழ். கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு கனகசபை அவர்கள் நேற்று (03 - 12 - 2001) திங்கட்கிழமை காலமானார். அன்னார் குமாரவேலு —மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் கமலேஸ்வரியின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04 - 12 - 2001) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**திருமதி கமலேஸ்வரி** (மனைவி)
**சி. தனபாலசிங்கம்** (மைத்துனர்)

111, காரைநகர் றோட்,
கொட்டடி, யாழ்ப்பாணம். (95597)

## செல்வராஜா மகாலிங்கம்
### (சின்ராசா)

(முன்னாள் போக்குவரத்துப் பரிசோதகர்,
இ. போ. சபை, தற்போதைய உரிமையாளர்,
முருகன் ஸ்ரோர்ஸ் முடமாவடி)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கு, அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராஜா மகாலிங்கம் ஞாயிற்றுக்கிழமை 02 - 12 - 2001 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் அப்பாப்பிள்ளை செல்வராஜா - அன்னலட்சுமி தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - விசாலாட்சி தம்பதிகளின் மருமகனும், இரத்தினதேவியின் அன்புக் கணவரும், விஜித்தா, விஜியேந்திரன் (புகைப்படப் பிடிப்பாளர், பூங்கனிச்சோலை), சுஜாத்தா (கலைப் பீடம், 4 ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்), சஜேந்திரன் (மாணவன், உயர்தர வர்த்தகப்பிரிவு - 2002, யாழ். மத்தியகல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனலிங்கம் (கனடா - முன்னாள் பொறியியலாளர், கந்தளாய் சீனி ஆலை), காலஞ்சென்ற தர்மலிங்கம், சிவலிங்கம் (முன்னாள் கைத்தறி உற்பத்தி முகாமையாளர், யாழ். மாவட்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், கோண்டாவில்), ரதிமணிதேவி (லண்டன்), ரஞ்சனாதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சடாட்சரம் - பரமேஸ்வரி தம்பதிகளின் பெறாமகனும், தவமணிதேவி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற இராஜகுமாரியம்மா (நெசவுப்போதனாசிரியர்), கதிர்காமநாதன் (லண்டன்-முன்னாள் பொறியியலாளர், உருக்கு கூட்டுத்தாபனம் அத்துருகிரிய), சர்வானந்தம் (லண்டன் - முன்னாள் புகையிரதநிலைய அதிபர், பளை), பெரியதம்பி (வட்டக்கச்சி), காலஞ்சென்ற கனகசபை, சண்முகநாதன், நாகேஸ்வரி (ஜேர்மனி), சரவணபவானந்தன் (டோகா) ஆகியோரின் மைத்துனரும், புனிதவதி, சிவானந்தம், புஸ்பநாயகி, இராமகிருஷ்ணன் (ஜேர்மனி), சகுந்தலாதேவி, பிரதீபன், பிரமிளா (உதவி விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்), காண்டீபன் (அச்சுக்கோர்ப்பாளர், உதயன்), மித்திலா (யூனியன் கல்லூரி) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், துஸ்யந்தி (ஜேர்மனி), சாந்தி ஆசிரியர், திருகோணமலை), சுதர்சினி (கனடா), தமயந்தி (லண்டன்), ஐங்கரன் (லண்டன்) ஆகியோரின் சித்தப்பாவும், சுதாகரன் (விஞ்ஞானபீடம், 3 ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்), ஜனனி (கிளி/ முருகானந்தா மகாவித்தியாலயம், விஞ்ஞானப் பிரிவு), செல்வகரன் (பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), இராமேஸ்வரி (ஜேர்மனி), தமிழினி (ஜேர்மனி), அகிலன் (ஜேர்மனி), பிறேம் (ஜேர்மனி) ஆகியோரின் பெரியதந்தையும், தீபன் (லண்டன்), சசிராம் (மருத்துவ பீடம், லண்டன்), தர்ஷி (லண்டன்), கலாரஞ்சனி, தயாரஞ்சன், கிருபரஞ்சினி, திருமகள் (கனடா), இராஜேந்திரன், கிருத்திகா (கனடா), ஆரணி, சஜீவன், ஜமீலன், சோபனா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (04 - 12 - 2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி செம்பாடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ம. விஜேந்திரன்** (மகன்)
(புகைப்படப் பிடிப்பாளர், பூங்கனிச்சோலை)
சகோதரர்: **செ.சிவலிங்கம்.**

செல்வராஜா அவனியூ,
அம்மன் வீதி.
திருநெல்வேலி, கிழக்கு. (சி/19637)

# வாக்களிப்பது எப்படி?

நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் நாளை நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் போன்ற எல்லாத் தேர்தல்களிலும் தற்போது விகிதாசார வாக்களிப்பு முறையே நடைமுறையில் இருந்து வந்தாலும், ஒவ்வொரு தேர்தலுக்கும் வாக்களிக்கும் முறை, வாக்கு எண்ணப்படும் முறை போன்றவற்றில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பொதுவாக கல்வி அறிவு மேம்பட்ட நாடுகளில்கூட வாக்களிக்கும் முறை மக்களுக்குச் சரியாகப் புரியாமல் இருப்பதால் கணிசமான வாக்குகள் செல்லுபடியற்ற வாக்குகளாக அமைவதைக் கடந்தகாலங்களில் கண்கூடாகக் கண்டுவருகிறோம்.

அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்கும் பெறுமதிவாய்ந்ததே. சிலவேளைகளில் ஒரு வாக்குக்கூட மிக முக்கியத்துவம்வாய்ந்ததாகவும் மாறிவிடுவதுடன், அரசியலில் பெரும் திருப்பங்களை ஏற்படுத்திவிடக்கூடியது. எனவே டிசெம்பர் 5ஆம் திகதி தேர்தலில் ஒவ்வொரு வாக்கையும் செல்லுபடியான வாக்காகச் செலுத்துவதை அனைவரும் உறுதிசெய்துகொள்ள வேண்டும். அந்த நோக்குடன் இங்கு சில விளக்கங்கள் தரப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் ஒன்பது நாடாளுமன்ற ஆசனங்களுக்காகப் போட்டி நடைபெறுகின்றது. போட்டியிடும் ஒவ்வொரு கட்சியும், சுயேச்சைக் குழுவும் மேலதிகமாக மூன்றில் ஒரு பங்கு உறுப்பினரைச் சேர்த்து வேட்பாளர் பட்டியலைச்சமர்ப்பிக்க வேண்டும். இந்த அடிப்படையில் ஒவ்வொரு கட்சியும் குழுவும் 12 பெயர்களை ஒழுங்குமுறையில் பட்டியலிட்டு தெரிவத்தாட்சி அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

### வாக்குச் சீட்டு

ஒவ்வொரு வாக்காளருக்கும் வாக்குச் சீட்டு ஒன்று வழங்கப்படும். போட்டியிடும் அரசியல் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் பெயர்கள் அந்தச் சீட்டில் பொறிக்கப்பட்டு அதற்கு எதிரே அக்கட்சிகள், சுயேச்சைக் குழுக்களுக்கு ஒதுக்கப்பட்ட சின்னங்களும் அச்சிடப்பட்டிருக்கும் (பார்க்க: மாதிரி வாக்குச் சீட்டு) அச்சின்னங்களுக்கு அடுத்து வெற்றுக்கூடுகள் விடப்பட்டிருக்கும். அவற்றில்தான் புள்ளடி (X) இடப்படவேண்டும்.

ஏதாவது ஒரு கட்சியின் சின்னத்துக்கு மட்டும் புள்ளடி இடப்பட்டிருந்தால் மாத்திரமே அந்த வாக்கு செல்லுபடியானதாகக் கருதப்படும். மாறாக ஒன்றுக்கு மேற்பட்ட சின்னங்களுக்கு புள்ளடிகள் இடப்பட்டால் அல்லது புள்ளடியே இடப்படாமல் இருந்தால் அவ்வாக்குச் செல்லுபடியற்ற வாக்காகக் கருதப்படும். ஒரு சின்னத்துக்கு இடப்படும் புள்ளடி அக்கட்சி பெற்ற வாக்காகக் கணிக்கப்படும்.

### விருப்பு வாக்கு

வாக்குச் சீட்டுக்கு அடியில் விருப்பு வாக்குகளைச் செலுத்துவதற்கான இலக்கங்கள் கட்டங்களுக்குள் அச்சிடப்பட்டிருக்கும். அவற்றில் ஒன்று முதல் 12 வரை வேட்பாளர்களின் இலக்கங்கள் காணப்படும்.

ஒவ்வொரு கட்சியும் அல்லது சுயேச்சைக் குழுவும் 12 வேட்பாளர்களின் பெயர்களைத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைத்திருக்கும். தெரிவத்தாட்சி அலுவலர் அப்பட்டியலில் காணப்படும் பெயர்களின் ஆங்கில முதல் எழுத்துகளின் வரிசை அடிப்படையில் ஒன்று தொடக்கம் 12 வரையான இலக்கங்களை வேட்பாளர்களுக்கு ஒதுக்கியிருப்பார். அந்த இலக்கங்கள் வாக்குச் சீட்டில் வரிசைப்படி பொறிக்கப்பட்டிருக்கும் விருப்புவாக்கை அளிப்பதற்கு இந்த இலக்கங்கள் பொறிக்கப்பட்ட கூட்டைப் பயன்படுத்த வேண்டும்.

**அ.இராஜரட்ணம்**
**சட்டத்தரணி,**
**சட்ட விரிவுரையாளர் (பகுதிநேரம்),**
**யாழ். பல்கலைக்கழகம்.**

ஒரு கட்சி அல்லது ஒரு சுயேச்சைக் குழுவின் சின்னத்துக்கு நீங்கள் வாக்களித்துவிட்டால் -

அடுத்து நீங்கள் வேட்பாளர் இலக்கத்தில் புள்ளடியிடுவதன் மூலம் அந்தக் கட்சியின் அல்லது அந்த சுயேச்சைக் குழுவில் உள்ள வேட்பாளர்களில் உங்களுக்கு விரும்பியோருக்கு முன்னுரிமைப்படி வாக்களிக்க உரிமை - வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்தலாம்; பயன்படுத்தாமல் விடலாம். அது உங்கள் விருப்பத்தைப் பொறுத்தது.

ஆனால் நீங்கள் எந்தக்கட்சிக்கு அல்லது சுயேசசைக் குழுவுக்கு வாக்களிக்கின்றீர்களோ அந்த அணியைச் சேர்ந்த வேட்பாளர் ஒருவருக்கோ, இருவருககோ அல்லது மூவருக்கோ மட்டும்தான் நீங்கள் விருப்பு வாக்கை அளிக்க முடியும்.

கட்சிக்குரிய வாக்கை ஓர் அணிக்கு அளித்துவிட்டு, விருப்பு வாக்கை வேறு ஒரு கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவருக்கு அல்லது சேர்ந்தவர்களுக்கு நீங்கள் அளிக்க முடியாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

### விருப்பு வாக்கை அளிக்கும் முறை

இனி விருப்பு வாக்கை எப்படி அளிப்பது என்பதைப் பார்ப்போம்.

ஒரு கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களித்தாகி விட்டது. அந்த அணியில் இருக்கும் பன்னிரண்டு பேரில் யாராவது ஒருவருக்கு அல்லது இருவருக்கு அல்லது மூவருக்கு நீங்கள் விருப்பு வாக்கை அளிக்க முடியும் என்பதையும் பார்த்தோம்.

ஒவ்வொரு கட்சியினதும் வேட்பாளர்கள் பன்னிரண்டு பேருக்கும் ஒதுக்கப்பட்ட இலக்கங்கள் வாக்குச் சாவடியில் விரைமாகத் தொங்கவிடப்பட்டிருக்கும். இதுதவிர, தேர்தல் ஆணையாளரால் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட வேட்பாளர் பட்டியல் மூலமோ அல்லது பத்திரிகை விளம்பரம் மூலமோ அந்த இலக்கங்களை நீங்கள் அறிந்து வைத்திருப்பீர்கள்.

அதன் அடிப்படையில் உங்கள் விருப்பத்துக்குரிய மூன்று வேட்பாளரின் இலக்கங்களுக்கு மேல் நீங்கள் புள்ளடியிடுவதன் மூலம் உங்கள் விருப்பத்தெரிவை நீங்கள் வெளிப்படுத்தலாம்.

மூன்றுக்கு மேற்பட்ட இலக்கங்களுக்கு மேல் நீங்கள் புள்ளடியிட்டிருந்தால் உங்களின் விருப்புத் தெரிவு, கணக்கில் எடுக்கப்படமாட்டாது என்பதையும் கவனத்தில்கொள்ளவேண்டும்.

### கணக்கெடுப்பு

முதலில் கட்சிகளுக்கு அல்லது சுயேச்சைக் குழுக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் கணக்கில் எடுக்கப்பட்டு அட்டவணைப்படுத்தப்படும். அதன் அடிப்படையில் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களில் இருந்து தெரிவுசெய்யப்படப்போகும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

அதன் பின்னர் ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகள் தனித்தனியாக்கப்பட்டு, அவற்றில் விருப்பு வாக்குகள் கணக்கில் எடுக்கப்படும். ஒவ்வொரு அணியிலும் ஒவ்வொரு இலக்க வேட்பாளருக்கும் கிடைத்த விருப்பு வாக்குகள் கணக்கிடப்பட்டு, அவற்றின் அடிப்படையில் வேட்பாளரின் பெறுபேறு நிலை ஒழுங்குபடுத்தப்படும்.

ஒரு கட்சி அல்லது சுயேச்சைக் குழுவுக்கு எத்தனை எம்.பிக்கள் கிடைக்கின்றதோ அத்தனை எம்.பிக்கள் அந்தக் கட்சி வேட்பாளர்கள் பெற்ற விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர். ☆

## மாதிரி வாக்குச்சீட்டு

### நாடாளுமன்றத் தேர்தல்-2001

### யாழ். மாவட்டம்

| | |
|---|---|
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | |
| ஐக்கிய தேசியக் கட்சி | |
| ஐக்கிய சோஷலிசக் கட்சி | |
| மக்கள் விடுதலை முன்னணி | |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | |
| புதிய இடதுசாரி முன்னணி | |
| ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி | |
| ஜனநாயக இடதுசாரி முன்னணி | |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | |
| சிஹல உறுமய | |
| சுயேச்சைக் குழு | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

## தேர்தல் பணிக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.4

நாளை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களாகக் கடமையாற்றவுள்ள அனைவரையும் இன்று காலை 8 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரிக்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள், பஸ் இலக்கங்கள், வாக்கெடுப்பு நிலையங்கள் மற்றும் வாக்குப் பெட்டிகளைப் பெற்றுக்கொள்ளல், ஒப்படைத்தல் தொடர்பான விவரங்கள் யாவும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால் மத்திய கல்லூரியில் வைத்து வழங்கப்படவுள்ளன.

மேற்படி அலுவலர்கள் குறிப்பிட்ட நேரத்துக்குச் சமுகமளிப்பதற்காக இன்று காலை 6.30 மணிக்கும் 7.30 மணிக்கும் இடையிலான நேரத்தில் சகல பிரதான வீதிகளிலும் விசேட பஸ் சேவைகள் இடம்பெறவுள்ளன.

வருகை தரவுள்ளோர் தம்முடன் மதிய உணவு, மாற்று உடை, போர்வை ஆகியவற்றையும் எடுத்து வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

யாழ்.செயலகத்தின் அன்றாட பணிகள் யாவும் நிறுத்தப்பட்டு, தேர்தல் தொடர்பான பணிகளே தற்போது இடம்பெற்றுவருகின்றன. தேர்தலுக்கான பூர்வாங்க வேலைகள் மட்டுமே நடைபெற்றுவருகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-8-10)


## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

நெடுந்தீவு மேற்கு நெழுவினி சித்திவிநாயகர் தேவஸ்தானம்

மேற்படி ஆலய புனரமைப்புப் பணிக்காக முதற்கட்டமாக ஒரு லட்சம் ரூபாவையும் மின் பொறி கொள்வனவுக்காக பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் ரூபா ஐம்பதாயிரத்தையும் ஒதுக்கீடு செய்து உடனடியாக வழங்கியுதவியமைக்காக



மாண்புமிகு அமைச்சர்
கே.என்.டக்ளஸ் தேவானந்தா
அவர்களையும் -



யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
திரு.கே.வி.குகேந்திரன் (ஜெகன்)
அவர்களையும் -



ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரும் தீவுப்பகுதி அமைப்பாளருமான
திரு.என்.மதனராஜா (மனோ)
அவர்களையும் -



ஈ.பி.டி.பி. நெடுந்தீவு அமைப்பாளர்
திரு.கே.நவநீதன் (மோகன்)
அவர்களையும் -

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர்
புலவர் A.W.அரியநாயகம்
அவர்களையும் -

இதயபூர்வமான நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்,
நெடுந்தீவு மேற்கு நெழுவினி
சித்தி விநாயகர் தேவஸ்தானம்.

(95588)



## மனப்பூர்வமாக நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

அரசியல் உரிமையும் அபிவிருத்தியும் தொடரவேண்டும்.

நுணாவில், மட்டுவில், சரசாலை வணிகர் கழக அங்கத்தவர்களுக்கு தமது வியாபார புனரமைப்பு நிதியாக 37,50,000/= ரூபாவை ஒதுக்கீடு செய்து அதில் 18,75,000/= ரூபாவை உடன் வழங்கி எமது அங்கத்தவர்களின் வாழ்க்கையை வளம்படுத்த உதவிய பெருந்தகைகளான



வடக்கு - கிழக்கு
புனர்வாழ்வு, புனரமைப்பு
மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும் -



சாவகச்சேரி தொகுதி
E.P.D.P. அமைப்பாளர்
உயர்திரு.
**அலெக்சாண்டர்** (சாள்ஸ்)
அவர்களையும் -

மனப்பூர்வமாக நன்றியுடன் நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நுணாவில், மட்டுவில், சரசாலை வணிகர் கழகம்,
மட்டுவில் தெற்கு.

(95333)


## கண்ணீர் அஞ்சலி

4 ஆம் வருட நுண்கலை வரலாற்றுத்துறை மாணவியாகிய செல்வி ம.சுஜாத்தா அவர்களின் அன்புத் தந்தையார்

**செ.மகாலிங்கம்** அவர்களின்

மறைவினால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அமரருக்கு எமது கண்ணீரஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

*யாழ்.பல்கலைக்கழகம்.*

4ஆம் வருட நுண்கலை வரலாற்றுத்துறை மாணவிகள்.

(95590)


# அன்பார்ந்த வாக்காளப் பெருமக்களே!



**ஊர்காவற்றுறையில் 28-11-2001 இல் எம் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மிகக் கொடூரமான வன்முறைத் தாக்குதலினால் எனது உடல் உறுப்புக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் உங்களிடம் நேரடியாக வந்து வாக்குகளைக் கேட்பதற்கு முடியாத நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளேன்.**

**ஆகவே எனது நிலையை உணர்ந்து, இனத்தின் விடுதலைக்காக போராடும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமான உதயசூரியனுக்கு நேரே புள்ளடியிட்டு வாக்களித்து எனது இலக்கமான 6 இன் மேலும் புள்ளடியிட்டு என்னையும் தெரிவு செய்யுமாறு மிகவும் பணிவன்புடன் விண்ணப்பிக்கின்றேன்.**

## என்றும் எம்மக்களின் விடிவுக்காக என்னைத் தியாகம் செய்ய ஆயத்தமாகவுள்ளேன் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



## தமிழர் விடுதலைக் கூட்டணி ✕

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ~~6~~ | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

## இல. 6

(95516)

## எம்.கே.சிவாஜிலிங்கம்

# வீர நெஞ்சங்களை வாழ்த்துகின்றோம்

தீவகத்தில் நடந்த காடைத்தனமான தாக்குதலில் மரணித்த எமது உடன் பிறப்புகளுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன், காயமடைந்த தமிழர் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் **திரு.மாவை சோ.சேனாதிராஜா, திரு.கே.சிவாஜிலிங்கம்** மற்றும் அப்பாவித் தமிழ் **மக்களின்** உயிரை, தமது உயிரைத் துச்சமாக மதித்துக் காப்பாற்றிய **திரு.சுரேஷ் பிரேமச்சந்திரன்** அவர்களுக்கும் அவரோடு தோளோடு தோள் நின்று உதவிய வீர நெஞ்சங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

தமிழ்த் தேசிய எழுச்சிக்கு வித்திட்ட தமிழர் கூட்டமைப்புக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், இக்கூட்டமைப்பு வலுப்பெற செயல் வீரர்கள் **சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம்** ஆகியோரையும் தமிழ் மக்கள் தெரிவுசெய்யவேண்டும் என வேண்டுகின்றோம்.

## தமிழர் விடுதலைக் கூட்டணி ✕

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ~~4~~ | 5 | ~~6~~ | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |

(C/19625)

**- கனடாத் தமிழ் மக்கள்.**

# சிந்திக்காமல்
# வாக்களிப்பதால்

# நீங்களே

## வன்முறையை
## ஆரம்பிக்கிறீர்கள்

## உங்கள் விருப்பு வாக்கை
## வன்முறைக்கு
## எதிராகப்
## போடுங்கள்!

சுதந்திரமான, நியாயமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்பு (PAFFREL)

சுதந்திரமும் நீதியும் வாய்ந்த தேர்தலுக்கான இயக்கம் (MIFFE)

அனுசரணை:

ஜப்பான்

உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி

(C/19592)

# நாடாளுமன்றத் தேர்தல் - 2001.12.05

## இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்களுக்கான போக்குவரத்து ஒழுங்கு

| பேருந்து இல. | புறப்படும் இடம் | புறப்படும் நேரம் | செல்லும் வாக்களிப்பு நிலையம் | செல்லும் பாதை ஒழுங்கு |
|---|---|---|---|---|
| 101 | பருத்தித்துறை | 7.05, 9.30 | குடத்தனை கரையூர் அ.மி.த.க பாட.<br>குடத்தனை அ.த.க. பாடசலை | பருத்தித்துறை → தும்பளை → கற்கோவளம் → வல்லிபுரம் → குடத்தனை<br>மீண்டும் அதேபாதையில் திரும்பிப் பருத்தித்துறை. |
| 102 | பருத்தித்துறை | 8.00, 10.00 | குடத்தனை காரையூர் அ.மி.த.க. பாட<br>குடத்தனை அ.த.க. பாடசாலை | பருத்தித்துறை → மந்திகை → உபய கதிர்காமம் → வல்லிபுரம் → குடத்தனை<br>மீண்டும் அதேபாதையில் திரும்பிப் பருத்தித்துறை. |
| 103 | அம்பன் | 7.30, 9.30, 11.15 | தும்பளை சிவப்பிரகாச வித். | அம்பன் → குடத்தனை → வல்லிபுரம் → கற்கோவளம் → தும்பளை<br>மீண்டும் அதேபாதையில் திரும்பி அம்பன். |
| 104 | பருத்தித்துறை | 7.15, 8.30, 10.00<br>11.15, 1.10 | நெல்லியடி ம.ம.வித்<br>புலோலி றோ.க.த.க. பாடசாலை | பருத்தித்துறை → புலோலி → மந்திகை → நெல்லியடி → கலிகை →<br>மந்திகை → புலோலி → பருத்தித்துறை (வட்டப்பாதை). |
| 105 | பருத்தித்துறை | 7.15, 8.30, 9.45<br>11.00, 1.00, 2.00 | நெல்லியடி ம.ம.வித்<br>புலோலி றோ.க.த.க. பாடசாலை | பருத்தித்துறை → மந்திகை → கலிகை → நெல்லியடி → மாலுச்சந்தி →<br>மந்திகை → புலோலி → பருத்தித்துறை (வட்டப்பாதை). |
| 106 | பருத்தித்துறை | 7.15, 8.30, 9.45<br>11.00, 1.00, 2.00 | நெல்லியடி ம.ம. வித்தி.<br>புலோலி றோ.க.த.க. பாடசாலை | பருத்தித்துறை → பொலிகண்டி → வல்வெட்டித்துறை → உடுப்பிட்டி →<br>நெல்லியடி → மந்திகை → புலோலி → பருத்தித்துறை (வட்டப்பாதை). |
| 107 | நெல்லியடி | 7.05, 8.35, 10.05<br>12.35, | நெல்லியடி ம.ம.வித்தியாலயம் | நெல்லியடி → குஞ்சர்கடை → உடுப்பிட்டி → வல்வெட்டித்துறை →<br>பொலிகண்டி → திக்கம் → வதிரி → நெல்லியடி (வட்டப்பாதை) |
| 108 | நெல்லியடி | 7.05, 8.05, 9.05<br>10.05, 11.05, 01.05 | கப்புது ஏகாம்பர வித்தியாலயம், | நெல்லியடி → கலிகை → யார்க்கரு → கப்புது<br>மீண்டும் அதேபாதையில் திரும்பி நெல்லியடி. |
| 109A<br>109B | பருத்தித்துறை | 7.15, 8.45 | உடுவில் இராமநாதன் கல்லூரி | பருத்தித்துறை → மந்திகை → நெல்லியடி → அச்சுவேலி → புத்தூர் →<br>நீர்வேலி → கோப்பாய் → உரும்பிராய் → மருதனார்மடம்<br>மீண்டும் அதேபாதையில் திரும்பி பருத்தித்துறை. |
| 110 | பருத்தித்துறை | 8.00 | உடுவில் இராமநாதன் கல்லூரி | பருத்தித்துறை → மந்திகை → கலிகை → நெல்லியடி → அச்சுவேலி →<br>நீர்வேலி → கோப்பாய் → உரும்பிராய் → மருதனார்மடம்<br>மீண்டும் அதேபாதையில் திரும்பி பருத்தித்துறை. |
| 111 | பருத்தித்துறை | 7.30 | உடுவில் இராமநாதன் கல்லூரி | பருத்தித்துறை → பொலிகண்டி → வல்வெட்டித்துறை → உடுப்பிட்டி → வல்லை →<br>ஆவரங்கால் → கோப்பாய் → உரும்பிராய் → மருதனார்மடம்<br>மீண்டும் அதேபாதையில் திரும்பி பருத்தித்துறை. |
| 112 | கொடிகாமம் | 8.00, 10.30<br>12.00 | நெல்லியடி ம.ம.வித்.<br>புலோலி றோ.க.த.க. பாடசாலை | கொடிகாமம் → வரணி → நெல்லியடி → மந்திகை → புலோலி<br>பருத்தித்துறை மீண்டும் அதே பாதையில் திரும்பி கொடிகாமம். |
| 113 | மிருசுவில் | 7.35, 11.40 | நெல்லியடி ம.ம.வி.<br>புலோலி றோ.க.த.க. பாடசாலை | மிருசுவில் → கொடிகாமம் → வரணி → நெல்லியடி → மந்திகை →<br>புலோலி → பருத்தித்துறை மீண்டும் அதேபாதையில் திரும்பி மிருசுவில். |
| 114A | கனகம்புளியடி | 7.30, 10.15 | உடுவில் இராமநாதன் கல்லூரி | கனகம்புளியடி → நுணாவில் → கைதடி → கோப்பாய்<br>மருதனார்மடம் மீண்டும் அதே பாதையில் திரும்பி கனகம்புளியடி. |
| 114B | கனகம்புளியடி | 8.15, 10.30 | உடுவில் இராமநாதன் கல்லூரி | கனகம்புளியடி → நுணாவில் → கைதடி → கோப்பாய் → மருதனார்மடம்<br>மீண்டும் அதேபாதையில் திரும்பி கனகம்புளியடி. |
| 115A | ஊர்காவற்றுறை | 7.00 | உடுவில் இராமநாதன் கல்லூரி | ஊர்காவற்றுறை → துறையூர் → வேலணை → யாழ்ப்பாணம் →<br>உடுவில் இராம்நாதன் மீண்டும் அதேபாதையில் திரும்பி ஊர்காவற்றுறை. |
| 115B | ஊர்காவற்றுறை | 8.05 | உடுவில் இராமநாதன் கல்லூரி | ஊர்காவற்றுறை → துறையூர் → வேலணை → யாழ்ப்பாணம் →<br>உடுவில் இராமநாதன் மீண்டும் அதேபதையில் திரும்பி ஊர்காவற்றுறை. |
| 116A | யாழ்ப்பாணம் | 7.15 | நெல்லியடி ம.ம.வித்தியாலயம்<br>புலோலி றோ.க.த.க. பாடசாலை | யாழ்ப்பாணம் → நல்லூர் → கோப்பாய் → அச்சுவேலி → நெல்லியடி →<br>புலோலி → பருத்தித்துறை மீண்டும் அதேபாதையில் திரும்பி யாழ். |
| 116B | யாழ்ப்பாணம் | 8.30 | நெல்லியடி ம.ம.வித்தியாலயம்<br>புலோலி றோ.க.த.க. பாடசாலை | யாழ்ப்பாணம். → நல்லூர் கோப்பாய் → அச்சுவேலி நெல்லியடி →<br>மந்திகை → புலோலி → பருத்தித்துறை மீண்டும் அதேபாதையில் திரும்பி யாழ். |
| 117 | யாழ்ப்பாணம் | 7.45 | நெல்லியடி ம.ம.வித்தியாலயம்<br>புலோலி றோ.க.த.க பாடசாலை | யாழ்ப்பாணம் → திருநெல்வேலி → கோண்டாவில் → உரும்பிராய் →<br>கோப்பாய் → அச்சுவேலி → நெல்லியடி → புலோலி → பருத்தித்துறை →<br>மீண்டும் அதேபாதையில் திரும்பி யாழ். |
| 118 | யாழ்ப்பாணம் | 7.30 | நெல்லியடி ம.ம.வித்.<br>புலோலி றோ.க.த.க. பாடசாலை | யாழ்ப்பாணம் → கொக்குவில் → உடுவில் → சுன்னாகம் → புத்தூர் →<br>அச்சுவேலி → நெல்லியடி → மந்திகை → புலோலி → பருத்தித்துறை<br>மீண்டும் அதேபாதையில் திரும்பி யாழ். |
| 119 | யாழ்ப்பாணம் | 7.30, 9.00<br>10.30, 1.00 | உடுவில் இராமநாதன் கல்லூரி | யாழ்ப்பாணம் → கொக்குவில் → திருநேல்வேலி → கோண்டாவில் →<br>உடுவில் இராமநாதன் மீண்டும் அதேபாதையில் திரும்பி யாழ். |
| 120 | யாழ்ப்பாணம் | 7.30, 9.30<br>12.30 | உடுவில் இராமநாதன் கல்லூரி | யாழ்ப்பாணம் → நல்லூர் → இருபாலை - கோப்பாய் → உரும்பிராய் →<br>உடுவில் இராமநாதன் மீண்டும் அதேபாதையில் திரும்பி யாழ். |
| 121 | அச்சுவேலி | 7.30, 9.30<br>12.30 | உடுவில் இராமநாதன் கல்லூரி | அச்சுவேலி → புத்தூர் → புன்னாலைக்கட்டுவன் → சுன்னாகம் →<br>மருதனார்மடம் மீண்டும் அதேபதையில் திரும்பி அச்சுவேலி. |
| 122 | தெல்லிப்பழை | 7.15, 8.45,<br>10.15, 11.45, 2.00 | உடுவில் இராமநாதன் கல்லூரி | தெல்லிப்பழை → மல்லாகம் → சுன்னாகம் → மருதனார்மடம்<br>மீண்டும் அதேபாதையில் திரும்பி தெல்லிப்பழை. |
| 123 | தெல்லிப்பழை | 7.30, 11.30 | நெல்லியடி ம.ம.வித்தியாலயம்<br>புலோலி றோ.க.த.க. பாடசாலை | தெல்லிப்பழை → மல்லாகம் → சுன்னாகம் → புன்னாலைக்கட்டுவன் → புத்தூர் →<br>அச்சுவேலி → நெல்லியடி → மந்திகை → புலோலி → பருத்தித்துறை<br>மீண்டும் அதேபாதையில் திரும்பி தெல்லிப்பழை. |
| 124 | இளவாலை | 7.30, 10.00<br>1.00 | உடுவில் இராமநாதன் கல்லூரி | இளவாலை → பண்டத்தரிப்பு → பிரான்பற்று → தொட்டிலடி →<br>சண்டிலிப்பாய் → மருதனார்மடம் மீண்டும் அதேபாதையில் திரும்பி இளவாலை. |
| 125 | இளவாலை | 8.00 | நெல்லியடி ம.ம.வித்<br>புலோலி றோ.க.த.க. பாடசாலை | இளவாலை → பண்டத்தரிப்பு → பிரான்பற்று → தொட்டிலடி.<br>சங்கானை → மருதனார்மடம் → கோப்பாய் அச்சுவேலி →<br>நெல்லியடி → மந்திகை → புலோலி → பருத்தித்துறை.<br>மீண்டும் அதேபாதையில் திரும்பி இளவாலை. |
| 126 | மூளாய் | 7.15, 9.30<br>11.35 | உடுவில் இராமநாதன் கல்லூரி | மூளாய் → சுழிபுரம் → சித்தன்கேணி → சங்கானை →<br>சண்டிலிப்பாய் → மருதனாமடம் மீண்டும் அதேபாதையில் திரும்பி மூளாய். |
| 127 | மூளாய் | 7.15, | நெல்லியடி ம.ம.வித்.<br>புலோலி றோ.க.த.க. பாடசாலை | மூளாய் → சுழிபுரம் → சித்தன்கேணி → சங்கானை →<br>மருதனார்மடம் → கோப்பாய் → அச்சுவேலி → நெல்லியடி →<br>மந்திகை → புலோலி → பருத்தித்துறை மீண்டும் அதேபாதையில் திரும்பி மூளாய். |
| 128 | வட்டுக்கோட்டை | 8.00 | நெல்லியடி ம.ம.வித்.<br>புலோலி றோ.க.த.க. பாடசாலை | வட்டுக்கோட்டை → சித்தன்கேணி → சங்கானை → சண்டிலிப்பாய் →<br>மானிப்பாய் → மருதனார்மடம் → கோப்பாய் → அச்சுவேலி → நெல்லியடி →<br>மந்திகை → புலோலி → பருத்திக்துறை மீண்டும் அதேபாதையில் திரும்பி வட்டுக்கோட்டை |
| 129 | வட்டுக்கோட்டை | 7.15, 9.30, 12.15 | உடுவில் இராமநாதன் கல்லூரி | வட்டுக்கோட்டை → நவாலி → மானிப்பாய் → மருதனார்மடம் →<br>மீண்டும் அதேபாதையில் திரும்பி வட்டுக்கோட்டை. |
| 130 | வட்டுக்கோட்டை | 6.30 , 11.45 | நெல்லியடி ம.ம. வித்தி.<br>புலோலி றோ.க.த.க.பாடசாலை | வட்டுக்கோட்டை → நவாலி → மானிப்பாய் → மருதனார்மடம் →<br>கோப்பாய் → அச்சுவேலி → நெல்லியடி → மந்திகை → புலோலி →<br>பருத்தித்துறை மீண்டும் அதேபாதையில் திரும்பி வட்டுக்கோட்டை |
| 131 | அம்பன் | 8.15, 11.00, 2.20 | நெல்லியடி ம.ம.வித்தி.<br>புலோலி றோ.க.த.க. பாடசாலை | அம்பன் → குடத்தனை → வல்லிபுரம் → ஆனைவிழுந்தான் → புலோலி →<br>→ மந்திகை → நெல்லியடி மீண்டும் அதேபாதையில் திரும்பி அம்பன் |
| 132 | அம்பன் | 8.00 | மல்லாகம் ம.வித். | அம்பன் → குடத்தனை → வல்லிபுரம் → கற்கோவளம் → பருத்தித்துறை<br>மந்திகை → நெல்லியடி → புத்தூர் → சுன்னாகம் → மல்லாகம்<br>மீண்டும் அதேபாதையில் திரும்பி அம்பன். |
| 133<br>A,B | பருத்தித்துறை | 7.50, 9.00 | மல்லாகம் ம.வித். | பருத்தித்துறை → இன்பருட்டி → பொலிகண்டி → வல்வெட்டித்துறை →<br>தொண்டமனாறு → அச்சுவேலி → புத்தூர் → சுன்னாகம் →<br>மல்லாகம் மீண்டும் அதேபாதையில் திரும்பி பருத்தித்துறை. |
| 134 | மாதகல் | 7.35 | நெல்லியடி ம.ம.வித்.<br>புலோலி றோ.க.த.க. பாடசாலை | மாதகல் → பண்டத்தரிப்பு → தொட்டிலடி → கந்தரோடை →<br>சுன்னாகம் → புத்தூர் → நெல்லியடி → மந்திகை →<br>புலோலி → பருத்தித்துறை மீண்டும் அதேபாதையில் திரும்பி மாதகல். |
| 135 | யாழ்ப்பாணம் | 7.45 | நெல்லியடி ம.ம.வித்.<br>புலோலி றோ.க.த.க பாடசாலை | யாழ்ப்பாணம் → மானிப்பாய் வீதி → ஆறுகால்மடம் →<br>குளப்பிட்டிச்சந்தி → தாவடி → திருநெல்வேலி → கல்வியங்காடு →<br>கோப்பாய் → நெல்லியடி → மந்திகை → புலோலி →<br>பருத்தித்துறை மீண்டும் அதேபாதையில் திரும்பி யாழ். |

15ஆம் பக்கம் பார்க்க

## பனடோலுக்கு தட்டுப்பாடு

சண்டிலிப்பாய்,டிசெ.4

குருநகர் அரசினர் வைத்தியசாலையில் பனடோலுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதேவேளை - இவ் வைத்தியசாலையில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் புனரமைப்புச் செய்யப்பட்ட பிரசவவிடுதி இதுவரை இயங்காமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-135)

## பருத்தித்துறையில் மா இறக்கும் பணி

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து மா இறக்கும் பணிகள் கடந்த வெள்ளியன்று ஆரம்பமாகின.

யாழ்.குடாநாட்டு கூட்டுறவுச் சங்கங்களின் லொறிகள் மாவினைப் பெறுக் கொள்வதற்காக வரிசையில் காத்திருந்தன.

கடந்த சில நாள்களாக குடாநாட்டில் சிறிய அளவில் நிலவிய மாத்தட்டுப்பாடு இன்னும் ஓரிரு நாள்களில் நீங்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-182)

## தபாலகம் இடம்மாற்றம்

இல.18, கச்சேரி நல்லூர் வீதியில் இயங்கி வந்த அரியாலை உப தபாலகம் நேற்று திங்கட்கிழமை முதல் இல.586, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (ஸ்ரான்லிக் கல்லூரிக்கு முன்பாக) என்னும் புதிய முகவரியில் இயங்குகின்றதென யாழ்ப்பாணம் பிரதம தபாலதிபர் அறிவித்துள்ளார். (ம-ரி)

## பதிவாளர்களுக்கு நிரந்தர நியமனம்

பதில் கடமையாற்றும் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர்கள் நிரந்தர நியமனம் பெறவுள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி கூடிய அமைச்சரவை இது தொடர்பான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளதாக பதிவாளர் நாயகம் அரச அதிபர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

15.11.2001ஆம் திகதி வரையுள்ள காலத்தில் 6 மாத கால பதில கடமையைப் பூர்த்திசெய்த பதிவாளர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் நிரந்தர நியமனம் பெறுவர் என்றும் -

பதிவாளர் பதவிக்கான உரிய தகைமைகளை அவர்கள் பெற்றிருக்க வேண்டும் என்றும் -

பதிவாளர் நாயகத்தின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## இந்து ஆலயங்களின் ஒன்றியம் கோரிக்கை

நாட்டில் சமாதானத்தை அடைவதற்காக ஒன்றிணைந்துள்ள நான்கு தமிழ் கட்சிகளுக்கு இந்து தமிழ் மக்கள் இத்தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.

- இவ்வாறு மட்டக்களப்பு - அம்பாறை இந்து ஆலயங்களின் ஒன்றியமும், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையும் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

எதிர்வரும் பொதுத்தேர்தல் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகவும் - தமிழ மக்களின் சுய நிர்ணயத்தையும், சுய மரியாதையும் மீட்டெடுக்கக் கூடிய தொன்றாகவும் - அமையவுள்ளது.

பிரிந்து செயற்பட்ட பல தமிழ்க் கட்சிகளும் இணைந்து ஒரு குழுவாகத் தேர்தலில் போட்டியிடுவது தமிழ மக்களின் ஒற்றுமைக்கு ஆரம்பப்படியாக அமைந்துள்ளது.

கடந்த தேர்தலைவிட இத் தேர்தல் நிரந்தர சமாதானத்தை அடைவதற்கான ஒரு வழியாக இருப்பதால், அலட்சியம் செய்யாமல் வாக்களிக்க வேண்டும். என வேண்டுகின்றோம். இவ்வாறு அக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இரு சடலங்கள் கிரானில் மீட்பு

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் காணாமற்போன கிரானைச் சேர்ந்த கிராமசேவையாளர் ஞா.விவேகானந்தராஜா (வயது41), நேசன் ஆகிய இருவரது சடலங்கள் நேற்று முன்தினம் காலை கிரான், போரகள்ளி மடுப்பகுதியில் காணப்பட்டன.

இவர்களது சடலங்கள் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டபின் எடுத்துச் செல்லப்பட்டன.

மேற்படி இருவரும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இனந்தெரியாதோரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர். இவர்கள் இருவருக்கும் விடுதலைப் புலிகள் மரணதண்டனை விதித்ததாக ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ)


# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்
## 05.12.2001



## எனது அன்புக்குரிய தமிழ் மக்களே!




தாயகம் காப்போம்!

தமிழராட்சி மீட்போம்!

நாளை நடைபெறவுள்ள தேர்தலில் வாக்களிக்க உள்ள அன்பு நெஞ்சங்களே!

உங்கள் நெஞ்சங்களில் என்றும் நிலைத்து நிற்கும் உங்கள் தொண்டன், உங்கள் சேவகன்,

## நடராஜா இரவிராஜ்

- உடனடி யுத்த நிறுத்தம்,
- தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கம்,
- தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உடனடிப் பேச்சுவார்த்தை,
- நோர்வே மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை,
- பொருளாதாரத் தடை, மீன்பிடித் தடை, விவசாயத் தடை நீக்கம்,

❖ இடம்பெயர்ந்த வலிகாமம், தென்மராட்சி மக்கள் தமது சொந்த மண்ணில் மீண்டும் குடியமர வேண்டும்.

❖ தீவக மக்களின் அடிமை வாழ்க்கை நீக்கப்பட்டு, தீவகம் விடுதலை பெறவேண்டும்,

தீவக மைந்தன் அமரர் அண்ணன் பேரம்பலத்தின் நினைவு நிறைவேறவேண்டும்.



தென்மராட்சி மக்களே! அன்பு நெஞ்சங்களே!

☆ தென்மராட்சி மக்கள் நினைத்துப் பார்க்க முடியாத பாரிய யுத்தத்தினால், பாரிய இழப்புக்களைச் சந்தித்து, அகதி வாழ்க்கை வாழுகின்ற நிலை மாற்றப்படவேண்டும் - மாற்றுவோம்!

☆ இடிக்கப்பட்ட - அழிக்கப்பட்ட சொத்துக்களுக்கான நட்டஈடுகள், நிவாரணங்கள் எமது மக்களுக்கு எந்தவித அழுத்தங்களும், அச்சுறுத்தல்களும் இன்றி அரசியல் வேறுபாடுகள் இன்றி திட்டமிட்ட முறையில் பிரதேச செயலர் ஊடாகக் கிராம அலுவலர்களின் நேரடிக் கண்காணிப்பில் வழங்கப்படவேண்டும்.

☆ மிதி வெடிகள் அகற்றப்பட்டு, மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படல்வேண்டும்.

☆ மாணவர்களின் கல்வி வளம்பெற்று, எதிர்காலம் ஒளிமயமாக வேண்டும்.

**அன்புக்குரிய மக்களே!**

நான் தங்கள் இல்லத்துக்கு நேரில் வராதமைக்கு மனம் வருந்துகிறேன்.

குறிப்பாக இடம்பெயர்ந்துள்ள தென்மராட்சி மக்களை நான் சந்திக்க முடியாதமைக்கும் மனம் வருந்துகிறேன்.

எமது கட்சி உறுப்பினர்களுக்கும் எனக்கும் தீவகத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால், உயிரிழப்புக்கள், உயிருக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளமை தங்களுக்குத் தெரிந்ததே.

இவ்வாறான சூழ்நிலையைக் கருத்திற் கொண்டும், இத்தேர்தல் முறை தொகுதி ரீதியாக இல்லாமல் மாவட்ட ரீதியான தேர்தல் என்றபடியால் யாழ்.மாவட்டத்தில் சகல இடங்களுக்கும் முடியுமானவரை சென்று ஆதரவைக் கோரியுள்ளேன்.

தமிழ் இனம் இந்தத் தேர்தலில் சிந்தித்து, ஒரு முக்கிய செய்தியினை சர்வதேசத்துக்கும் பேரினவாதிகளுக்கும், அவர்களின் முகவர்களுக்கும் தெரியப்படுத்தவேண்டும்.

"அச்செய்தி தமிழினம் தன்மானத்துடனும், சுயகௌரவத்துடனும், உரிமைக்காக வாழ்ந்துகொண்டிருக்கிறது. தமிழ் மக்களுடைய உரிமைப்போராட்டத்துக்கு ஜனநாயக ரீதியாக ஆதரவாக இருக்கிறது. எந்தப் பேரினவாதக் கட்சிக்கும் அது அடிபணிந்து வாழத்தயாரில்லை" என்பதேயாகும். இந்தக் கொள்கையின் அடிப்படையில் உங்கள்முன், ஒற்றுமை அணியாம் - ஓர் அணியாம் - தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரிப்போம்.

## உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களிப்போம்!

| தமிழர் விடுதலைக் கூட்டணி | | X |
|---|---|---|

உங்கள் விருப்பு வாக்கில் ஒன்றினை எனது வெற்றி இலக்கம் 9 இற்கு 9 புள்ளடியிடுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

**எனது வெற்றி உங்கள் வெற்றி! தமிழினத்தின் வெற்றி!! தாயகமீட்சியின் வெற்றி!!!**

நடராஜா இரவிராஜ்
யாழ்.மாநகர முதல்வர்.
(சட்டத்தரணி)

(C/19682)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001

## யாழ். மாவட்டம்

## முஸ்லிம் காங்கிரஸின் ஒரேயொரு தமிழ் வேட்பாளர்

## ஞானசுந்தரம் ஆனந்தகுமார்

**தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கை நட்சத்திரம்**

**தமிழ் பேசும் மக்களின் எதிர்கால அரசியல் அபிலாசைகள் நிறைவுபெற.........**




அன்பார்ந்த மக்களே!

வேட்புமனுத் தாக்கல் செய்த காலந்தொட்டு இதுவரை பல வழிகளாலும் நான் உங்களுக்கு அன்புத் தொல்லை கொடுத்துவிட்டேன். நான் உங்களை நேராகச் சந்தித்தவேளையில், என் கருத்தைக் கேட்டும், பத்திரிகை மூலம் என் அறிக்கைகளை வாசித்தும் எனது கொள்கைகளை அறிந்திருப்பீர்கள்.

5ஆம் திகதி உங்களது வாக்குகளை எனக்களித்து உங்களது ஆதரவையும் நல்குங்கள்.

ஏதாவது ஒரு விதத்தில் என் சார்பாய் ஏதும் தவறு இழைத்திருந்தால் என்னை மன்னியுங்கள்; கனவான் அரசியல் நடத்தத் துணைநில்லுங்கள்.




(C/19617)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001

## யாழ். மாவட்டம்

# முஸ்லிம் காங்கிரஸின் ஒரேயொரு தமிழ் வேட்பாளர்

## ஞானசுந்தரம் ஆனந்தகுமார்

**மிகவிரைவில் - 13ஆவது பொதுத் தேர்தல்**
**இலங்கை மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலம்.**




கடந்தகால சிங்கள பேரினவாத அரசுகள் இந்த நாட்டைச் சீரழித்துவிட்டன. இதன் காரணமாக இலங்கை வாழ் மக்கள் மன அமைதியும், சமாதான வாழ்வும் இன்றி வாழ்கின்றனர். தொடரும் போரினால் பொருளாதாரம் நாசமாக்கப்பட்டு, சமா தான சக வாழ்வு சீர்குலைந்தது.

அரசியல்வாதி ஒருவனுக்கு உயர்ந்த குறிக்கோள் இருக்க வேண்டும். அது நாட்டை வளம்படுத்தக் கூடிய சிந்தனையாய் இருக்கவேண்டும்.

5ஆம் திகதி நடைபெறவிருக்கும் தேர்தலில் நான் ஏகோபித்த வாக்குகளால் வெற்றிபெற்று நாடாளுமன்றம் செல்வேன் என்பது திண்ணம். முதலில் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்குப் பாடுபடுவேன். அடுத்து யுத்தம் நிறுத்தப்பட்டு 3ஆம் தரப்பு மத்தியஸ்தத்துடன் கூடிய பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டு, தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளைத் தீர்க்கக் கூடிய அரசியல் தீர்வொன்று முன்வைக்கப்பட வேண்டும். இவை அனைத்தும் இதய சுத்தியுடன் நடைபெறவேண்டும். பேச்சுவார்த்தை என்ற அடிப்படையில் விடுதலைப் புலிகளை ஏமாற்ற முன்வரக்கூடாது.

தமிழர் அரசியல் பிரச்சினைக்கு நீதியான தீர்வு கிடைக்கப்பெற்றால், விடுதலைப் புலிகள் ஜனநாயகத் தேசிய நீரோட்டத்தில் கலந்துகொள்வார்கள். அவ்வாறான நிலையில் வடக்கு கிழக்கு தமிழ் அரசியல்வாதிகள் விட்டுக்கொடுப்புகளைச் செய்து விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாய் ஏற்றுக்கொள்ளவேண்டும். அத்துடன் முஸ்லிம் அரசியல் தலைமைத்துவமும், மலையக தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவமும்,, தமது இனத்துவத்தையும், தேசிய தலைமையையும், தனித்துவத்தையும் பேணிப் பாது காத்துக் கொண்டு பொது இணக்கப்பாடுடன் கூடிய பொது வேலைத் திட்டத்துடன் இணைய வேண் டும். இதன் மூலம் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு பலம்பெற்று, தமிழ் பேசும் மக்களின், ஏகோபித்த குரலாய் நிற்பதுடன், இவ்வாறு செயல்பட்டால் தமிழ் பேசும் மக்கள் மீது எந்த ஒரு தீயசக்தியும், பேரினவாத சக்திகளும் கைவைக்க முடியாது என்பது உறுதி.




இதன் மூலம் நாம் ஒளிமயமான எதிர்காலத்தைக் காண்பதுடன், நாம் அனைவரும் சௌயன்னியத்துடனும், சுதந்திரத்துடனும் ஐக்கியமாகி இலங்கையர் என்ற ஒரு குடையின் கீழ் வாழமுடியும்.

(C/19616)

## பாராட்டி நன்றி நவில்கின்றோம்

**சபரிகிரி ஐயப்பசுவாமி பீடம்**
*கரண்டக்குளம் - கட்டுவன்*

எமது ஆலயத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு நிதி தந்துதவிய பெருந்தகைகளான,



மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



வலி. வடக்கு ஈ.பி.டி.பி. அமைப்பாளர்
**உயர்திரு.சிவகுமார்** *(வேலு)*
அவர்களையும்

நந்நான்கு பேறும் நலனுடன் பெற்று
நாநிலம் போற்ற நல்லவை செய்து
மக்கள் பணியே மகேஸ்வரன் பணி
யெனக்கருதும் நீவிர் பல்லாண்டு பல்லாண்டு
வாழ சபரிகிரி நாதன் அனுக்கிரகம் செய்வாராக.
நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(95578)

சிவஸ்ரீ சிவ அருணாசலக்குருக்கள்
மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை. - **ஐயப்பன் தேவஸ்தானம்.**



## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

மாதகல் சகாயபுரம் புனித சகாயமாதா ஆலயத்தின புனரமைப்புக்கு இரண்டு லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்து, அதில் ஒரு லட்சம் ரூபாவைக் காசோலையாக வழங்கிய,



வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு
அமைச்சர் கௌரவ
**K.N. டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



வலி. தென்மேற்கு பிரதேச சபைத்
தலைவர்
**திரு.வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்**
அவர்களுக்கும்

எமது நன்றியையும், பாராட்டையும் தெரிவித்து
வாழ்த்துகின்றோம்.

(95565)

**பங்குத் தந்தையும்,**
**சகாயபுரம் பங்கு மக்களும்.**


## அரசாங்க அறிவித்தல்

### நாடாளுமன்றத் தேர்தல் - 05.12.2001

மேற்படி தேர்தலில் இல. 10 - யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரத்தின் பிரகாரம் சிங்கள அகரவரிசையில் தயாரிக்கப்பட்ட வேட்பாளர்களின் பெயர்களையும், இலக்கங்களையும் குறிப்பிட்டு, வாக்காளர் அட்டையுடன் விநியோகிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியல் தொடர்பான தமிழ் அறிவித்தலில் (முதன்மை வேட்பாளர்) பெயர் இல. 3 அஹமட் சுல்தான் சுபியான் என்ற பெயர் தவறவிடப்பட்டுள்ளது என்றும் - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர்களின் பெயர்கள் பின்வருமாறு அமைய வேண்டும் எனவும் - இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்**

**மரம**

01. அப்துல் காதர் இக்பால்
02. அப்துல் ஹய் ஹசன் மொகிதீன்
03. அஹமட் சுல்தான் சுபியான்
04. ஞானசுந்தரம் ஆனந்தகுமார்
05. மொஹமட் அபூபக்கர் செயட் றிபாய்
06. மொஹமட் உசன் தம்பி அப்துல் கையூம்
07. மொஹமட் ராசா நவ்சாட்
08. மொஹிதீன் அப்துல் காதர் ஜவ்பர்
09. சாஹூல் ஹமீட் தையூர்
10. சாஹூல் ஹமீட் முத்தலிப்
11. சுபயிர் மொஹமட் மனாப்தீன்
12. சுல்தான் அப்துல் காதர் முபீன்

க. சண்முகநாதன்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
இல.10 - யாழ்ப்பாணம் -
தேர்தல் மாவட்டம்.

தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகம்,
யாழ்ப்பாணம். 2001-11-28.

(C/19558)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.4

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர் மா.இரத்தினசிங்கம் தலைமையில் வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-7-ரி)

## மணவாளக்கோல விழா

யாழ்ப்பாணம், டிசெ.4

கொடிகாமம் பெரிய நாவலடி அருள்மிகு சிவகாமசுந்தரி அம்மன் ஆலய மணவாளக்கோல விழா இன்று நடைபெறவுள்ளது.

காலை 9 மணி முதல் விசேட அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து விழா இடம்பெறும். (ம-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**உயர்திரு.N.யோகராஜன்**
B.A., P.G. Dip. in Edu. (O.U.S.L.), S.L.T.E.S.
DEPUTY ZONAL DIRECTOR,
DEPARTMENT OF TECHNICAL EDUCATION
& TRAINING ZONE 4 (NORTH & EAST)

எனக்கும் என் சக ஊழியருக்கும் கடந்த 9 ஆண்டு களாக நாளாந்த சம்பள அடிப்படையில் வேலை செய்து வந்த எமக்கு நிரந்தர நியமனம் பெற்றுத்தந்த எமது பிராந்திய பிரதிப் பணிப்பாளர் யோகராஜன் அவர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடனும், திணைக்களத் தலைவர்களுடனும் எம் நிலைமையை எடுத்துச்சொல்லி, வாழ்வில் மறக்கமுடியாத இப் பேறினைப் பெற்றுத்தந்தமையையிட்டு மனதார வாழ்த்துகின்றோம்.

**சிவலிங்கம் சிவகுமார் -**
பாதுகாப்பு உத்தியோகத்தர்
(தொழில்நுட்பக் கல்லூரி)

*சுவினை,*
*புன்னாலைக்கட்டுவன்.* (95574)



# யுத்தத்திற்கு, வன்முறைக்கு எதிரான வேட்பாளர்களுக்கு வாக்களிப்போம்



பார்க்கும் திசைகளிலெல்லாம்
பதவி ஆசை
மோதிக் கொள்ளச் செய்கிறது.

நிறங்களை அடையாளப்படுத்திக்
கொண்டுள்ள மாமாக்களும் மாமிகளும்
கொலைக் களம் வரை மோதிக்
கொள்கின்றனர்.
யாருக்காக?
எங்களுக்காகவா?
ஜனனித்த நாள் தொடக்கம்
யுத்தத்தின் மத்தியில் எமது
வாழ்க்கை......

பிறந்த முதல் நாள். முதல் மூச்சு
விடும் போதே எங்கள் பிஞ்சு
உள்ளங்களில் துப்பாக்கி சூடு
விழுந்தது.

அன்றிலிருந்து நடுங்கி நடுங்கி
பயந்து வாழும் எங்கள் பிஞ்சு
உள்ளங்களை சுத்தமான சுவாச
மூச்சு விடவே அனுமதிக்க
மாட்டீர்களா?

பிஞ்சு மனசுகளில் வன்முறைகள்
இல்லை
உண்மையாக.....




BEAT

මහජන සාම පෙරමුණ
மக்கள் சமாதான முன்னணி
People's Peace Front

සාමය PEACE சமாதானம்

32/14 புரான விகாரை வீதி.
கொழும்பு 06.
தொலைபேசி: 01-818344. 854127
பக்ஸ்: 01-819064
E-mail:peace2@sri.lanka.net

(C/19520)





## பொதுத் தேர்தல் - 2001 யாழ்.மாவட்டம்
### என்றும் உங்கள் சேவையில்
உங்கள் வாக்கு யாழ்.மாவட்டத் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்
## திரு.கா.சந்திரராசா (SLAS)
அவர்களுக்கே!
*(ஓய்வுபெற்ற பிரதேச செயலர், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை, நிர்வாக அதிகாரி (A.O.) யாழ்.கல்வித் திணைக்களம்)*

(94855)




- அராலி வாழ் மக்கள் -

# நாடாளுமன்றத் தேர்தல் - 2001.12.05

# இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்களுக்கான போக்குவரத்து ஒழுங்கு

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

| பேருந்து இல. | புறப்படும் இடம் | செல்லும் இடம் | புறப்படும் நேரம் | பாதை இலக்கம் | செல்லும் பாதை ஒழுங்கு |
|---|---|---|---|---|---|
| 136 A,B,C | பருத்தித்துறை | யாழ்ப்பாணம் | 7.15, 7.45, 8.30, 10.45, 11.15 | 750 | பருத்தித்துறை → மந்திகை → நெல்லியடி → அச்சுவேலி → கோப்பாய் → யாழ்ப்பாணம் மீண்டும் திரும்பி பருத்தித்துறை. |
| 137 | பருத்தித்துறை | யாழ்ப்பாணம் | 9.30 | 764 | பரு. → மந்திகை → கலிகை → நெல்லியடி → அச்சுவேலி → கோப்பாய் → மருதனார்மடம் → யாழ்ப்பாணம் மீ.தி . பரு. |
| 138 | பருத்தித்துறை | அச்சுவேலி | 8.30, 11.00 | 752 | பருத்தித்துறை → வல்வெட்டித்துறை → தொண்டமானாறு → அச்சுவேலி மீ.தி. பரு. |
| 139 | பருத்தித்துறை | கல்லுவம் | 7.00, 9.00, 1.00 | 757/1 | பருத்தித்துறை → மந்திகை → நெல்லியடி → கல்லுவம் மீ.தி. பரு. |
| 140 | வல்வெட்டி. | யாழ்ப்பாணம் | 7.10 | 751 | வல்வெட்டித்துறை → அச்சுவேலி → கோப்பாய் → யாழ்ப்பாணம் மீ.தி. பரு. |
| A, B | பருத்தித்துறை | யாழ்ப்பாணம் | 7.35, 10.40 | 751 | பருத்தித்துறை → வல்வை → அச்சுவேலி → கோப்பாய் → யாழ்ப்பாணம் மீ.தி. பரு. |
| | பருத்தித்துறை | அச்சுவேலி | 12.45 | 751 | பருத்தித்துறை → வல்வெட்டித்துறை → அச்சுவேலி மீ.தி. வல்வை |
| 141 A, B | வியாவில் | யாழ்ப்பாணம் | 7.15, 8.30 11.15, 12.20 | 782 | வியாவில் → பொன்னாலை → மூளாய் → சுழிபுரம் → சித்தன்கேணி → சங்கானை → மானிப்பாய் → யாழ்ப்பாணம் → மீ.தி. வியாவில் |
| 142 | யாழ்ப்பாணம் | காரைநகர் (வியாவில்) | 8.15, 12.00, 4.00 | 782 | காரைநகர் → பொன்னாலை → மூளாய் → சுழிபுரம் → சித்தன்கேணி → சங்கானை → மானிப்பாய் → யாழ்ப்பாணம் - மீ.தி. கா. |
| 143 | காரைநகர் | யாழ்ப்பாணம் | 7.45, 11.45 | 786 | காரைநகர் → பொன்னாலை → மூளாய் → மாவடி → நவாலி → ஆனைக்கோட்டை → யாழ்ப்பாணம் - மீ.தி. கா. |
| 144 | யர்ழ்ப்பாணம் | காரைநகர் | 8.15, 11.15 | 786 | யாழ்ப்பாணம் → நவாலி → மாவடி → மூளாய் → பொன்னாலை → காரைநகர் மீ.தி. யாழ். |
| 145 | யாழ்ப்பாணம் | வியாவில் | 8.00, 11.45 | 785 | யாழ்ப்பாணம் → வட்டுக்கோட்டை → மாவடி → சித்தன்கேணி → சுழிபுரம் → பொன்னாலை → வியாவில் - மீ.தி. யாழ். |
| 146 | வியாவில் | யாழ்ப்பாணம் | 6.40, 10.30 | 785 | வியாவில் → பொன்னாலை → சுழிபுரம் → சித்தன்கேணி → மாவடி → வட்டுக்கோட்டை → யாழ்ப்பாணம் - மீ.தி. வி. |
| 147 | யாழ்ப்பாணம் | காரைநகர் | 12.30, 4.00 | 785 | யாழ்ப்பாணம் → வட்டுக்கோட்டை → மாவடி → சித்தன்கேணி → சுழிபுரம் → பொன்னாலை → காரைநகர் - மீ.தி. கா. |
| 148 | தெல்லிப்பழை | காரைநகர் | 7.00, 11.00, 3.15 | 740 | தெல்லிப்பழை → பொன்னாலை → காரைநகர் - மீ.தி. தெ. |
| 149 | ஊர்காவற்றுறை | யாழ்ப்பாணம் | 8.00 | 780 | ஊர்காவற்றுறை → புளியங்கூடல் → துறையூர் → வேலணை → யாழ்ப்பாணம் - மீ.தி. ஊ. |
| | ஊர்காவற்றுறை | வேலணை | 11.45 | 780 | ஊர்காவற்றுறை → புளியங்கூடல் → துறையூர் → வேலணை. |
| 150 | ஊர்காவற்றுறை | யாழ்ப்பாணம் | 7.30, 11.00 - | 777 | ஊர்காவற்றுறை → நாரந்தனை → அராலிச் சந்தி → யாழ்ப்பாணம் மீ.தி. ஊ. |
| 151 | யாழ்ப்பாணம் | ஊர்காவற்றுறை | 7.30, 11.00 | 777 | யாழ்ப்பாணம் → அராலிச் சந்தி → நாரந்தனை → ஊர்காவற்றுறை மீ.தி. யாழ். |
| 152 | யாழ்ப்பாணம் | வேலணை | 7.30, 11.00 | 780/1 | யாழ். அராலிச் சந்தி → வேலணை மீ.தி. யாழ். |
| 153 | வேலனை | யாழ்ப்பாணம் | 7.00, 10.15, 12.45 | 766/1 | வேலணை → சாட்டி → யாழ்ப்பாணம் - மீ.தி. வே. |
| 154 | குறிகாட்டுவான் | யாழ்ப்பாணம் | 7.30 | 776 | குறிகாட்டுவான் → புங்குடுதீவு → வேலணை → யாழ்ப்பாணம் மீ.தி. கு. |
| | குறிகாட்டுவான் | வேலணை | 12.30 | 776 | குறிகாட்டுவான் → புங்குடுதீவு → வேலணை. |
| 155 | குறிகாட்டுவான் | யாழ்ப்பாணம் | 8.30 | 776 | குறிகாட்டுவான் → புங்குடுதீவு → வேலணை → யாழ்ப்பாணம் மீ.தி. கு. |
| 156 | மண்டைதீவு | யாழ்ப்பாணம் | 7.30, 10.00, 12.00 | 781 | மண்டைதீவு → யாழ்ப்பாணம் - மீ.தி. மண். |
| 157 | யாழ்ப்பாணம் | பருத்தித்துறை | 8.00 | 750 | யாழ்ப்பாணம் → அச்சுவேலி → நெல்லியடி → பருத்தித்துறை - மீ.தி. யாழ். |
| | யாழ்ப்பாணம் | சுழிபுரம் கிழக்கு | 10.15 | 736 | யாழ்ப்பாணம் → மானிப்பாய் → சித்தன்கேணி → சுழிபுரம் கிழக்கு - மீ.தி. யாழ். |
| 158 | யாழ்ப்பாணம் | சுழிபுரம் கிழக்கு | 7.30 | 736 | யாழ்ப்பாணம் → மானிப்பாய் → சித்தன்கேணி → சுழிபுரம் கிழக்கு - மீ.தி. யாழ். |
| | யாழ்ப்பாணம் | பருத்தித்துறை | 10.00 | 750 | யாழ்ப்பாணம் → அச்சுவேலி → நெல்லியடி → பருத்தித்துறை - மீ.தி. யாழ். |
| 159 | யாழ்ப்பாணம் | இளவாலை | 7.15, 10.00 | 789 | யாழ்ப்பாணம் → அராலி → வட்டுக்கோட்டை → சித்தன்கேணி → பண்டத்தரிப்பு → இளவாலை - மீ.தி. யாழ். |
| 160 | யாழ்ப்பாணம் | இளவாலை | 7.45, 10.15 | 788 | யாழ்ப்பாணம் → மானிப்பாய் → சண்டிலிப்பாய் → தொட்டிலடி → பண்டத்தரிப்பு → இளவாலை மீ.தி. யாழ். |
| 161 | இடைக்காடு | யாழ்ப்பாணம் | 7.05, 9.40 | 750/1 | இடைக்காடு → அச்சுவேலி → கோப்பாய் → யாழ்ப்பாணம் மீ.தி. இடைக்காடு. |
| 162 | அச்சுவேலி | யாழ்ப்பாணம் | 7.15, 9.30 | 986 | அச்சுவேலி → தோப்பு → நிலாவரை → இராஜவீதி → யாழ்ப்பாணம் மீ.தி. அச். |
| 163 | யாழ்ப்பாணம் | கைதடி | 9.00, 11.00, 1.35 | 769 | யாழ்ப்பாணம் → கோப்பாய் → நாவற்குழி → கைதடி மீ.தி. யாழ். |
| 164 | மருதனார்மடம் | யாழ்ப்பாணம் | [illegible], 10.00, 12.00 | 771 | மருதனார்மடம் → மானிப்பாய் → தாவடி → யாழ்ப்பாணம் மீ.தி. மருத. |
| 165 | சங்கானை | யாழ்ப்பாணம் | 8.00, [illegible].45, 1.10 | 789 | சங்கானை → சங்கானை வைத்தியசாலை → யாழ்ப்பாணம் மீ.தி. சங் |
| 166 | யாழ்ப்பாணம் | நவாலி | 8.00, 11.00 | 786/1 | யாழ்ப்பாணம் → குளப்பிட்டி → ஆனைக்கோட்டை → நவாலி மீ.தி. யாழ். |
| 167 | மாதகல் | யாழ்ப்பாணம் | 7.45, 10.30 | 787 | மாதகல் → பண்டத்தரிப்பு → சித்தங்கேணி → சங்கானை → சண்டிலிப்பாய் → மானிப்பாய் → யாழ்ப்பாணம் மீ.தி. மாத. |
| 168 | யாழ்ப்பாணம் | மாதகல் | 7.45, 10.15, 1.30 | 787 | யாழ்ப்பாணம் → மானிப்பாய் → சண்டிலிப்பாய் → சங்கானை → சித்தங்கேணி → பண்டத்தரிப்பு → மாதகல் மீ.தி. யாழ். |
| 169 | யாழ்ப்பாணம் | வடக்குப் புன்னாலைக்கட்டுவன் | 7.50, 9.30, 12.00 | 764 | யாழ்ப்பாணம் → திருநெல்வேலி → உரும்பிராய் → வட. புன்னாலைகட்டுவன் மீ.தி. யாழ். |
| 170 A,B | யாழ்ப்பாணம் | தெற்குப் புன்னாலைக்கட்டுவன் | 7.35, 8.50, 9.00, 10.15, 11.00, 12.45, 1.45 | 764 | யாழ்ப்பாணம் → திருநெல்வேலி → உரும்பிராய் → தெற்குப் புன்னாலைக்கட்டுவன் மீ.தி. யாழ். |
| 171 | யாழ்ப்பாணம் | உரும்பிராய் | 7.20, 8.45, 10.30, 11.30, 1.40 | 764 | யாழ். → திருநெல்வேலி → உரும்பிராய் மீ.தி. யாழ். |
| 172 | யாழ்ப்பாணம் | மகாஜனா | 8.45, 12.00 | 7?8 | யாழ்ப்பாணம் → சுன்னாகம் → கந்தரோடை → மாசியப்பிட்டி → மகாஜனா மீ.தி. யாழ். |
| 173 A,B,C | தெல்லிப்பழை | யாழ்ப்பாணம் | 7.05, 8.00, 8.50, 10.15, 10.45, 1.00, 7.30, 9.20, 11.20, 1.20 | 7?9 | யாழ்ப்பாணம் → கொக்குவில் → சுன்னாகம் → தெல்லிப்பழை மீ.தி. யாழ். |
| 174 | குப்பிளான் | யாழ்ப்பாணம் | 7.35, 10.00, 1.00 | 770 | யாழ்ப்பாணம் → கொக்குவில் → சுன்னாகம் → மல்லாகம் → குப்பிளான் மீ.தி. யாழ். |
| 175 | தெல்லிப்பழை | யாழ்ப்பாணம் | 7.15, 10.00 | 764 | தெல்லிப்பழை → சுன்னாகம் → புன். கட்டுவன் → யாழ்ப்பாணம் மீ.தி. தெல். |
| 176 | இளவாலை | யாழ்ப்பாணம் | 7.25, 10.45 | 718 | இளவாலை → விளான் → அளவெட்டி → மல்லாகம் → சுன்னாகம் → கொக்குவில் → யாழ்ப்பாணம் மீ.தி. இளா. |
| 177 | தெல்லிப்பழை | யாழ்ப்பாணம் | 8.00, 10.45 | 768 | தெல்லிப்பழை → மாசியப்பிட்டி → சுன்னாகம் → யாழ்ப்பாணம் மீ.தி. தெல். |
| 178 | யாழ்ப்பாணம் | சில்லாலை | 8.30, 12.00 | 791 | யாழ்ப்பாணம் → மானிப்பாய் → சங்கானை → தொட்டிலடி → பண்டத்தரிப்பு → சில்லாலை மீ.தி. யாழ். |
| 179 A,B | யாழ்ப்பாணம் | மிருசுவில் | 7.30, 9.00, 10.45 | 769 | யாழ்ப்பாணம் → கண்டிவீதி → மிருசுவில் மீ.தி. யாழ். |
| 180 | இளவாலை | யாழ்ப்பாணம் | 6.00, 11.30, 2.40 | 785 | இளவாலை → பன்னாலை → அம்பனை → சண்டிலிப்பாய் → மானிப்பாய் → யாழ். மீ.தி. இள. |
| | இளவாலை | தெல்லிப்பழை | 9.00, 10.15 | 795 | இளவாலை → தெல்லிப்பழை மீ.தி. இள. |
| 181 | தெல்லிப்பழை | யாழ்ப்பாணம் | 7.00, 9.15, 11.35 | 749 | தெல்லிப்பழை → அளவெட்டி → மாசியப்பிட்டி → சண்டிலிப்பாய் → மானிப்பாய் → யாழ்ப்பாணம் மீ.தி. தெல். |
| | யாழ்ப்பாணம் | பருத்தித்துறை | 2.50 | 750 | யாழ்ப்பாணம் → கோப்பாய் → அச்சுவேலி → நெல்லியடி → பருத்தித்துறை மீ.தி. யாழ். |
| 182 | தெல்லிப்பழை | தெற்குப் புன்னாலைக்கட்டுவன் | 7.05, 8.30, 10.00, 11.30 | 764/5 | தெல்லிப்பழை → மல்லாகம் → மயிலங்காடு → தெற்குப் புன்னாலைக்கட்டுவன் மீ.தி. தெல். |
| | யாழ்ப்பாணம் | பருத்தித்துறை | 3.15 | 750 | யாழ்ப்பாணம் → கோப்பாய் → அச்சுவேலி → நெல்லியடி → பருத்தித்துறை மீ.தி. யாழ். |

(C/15620)

## அனுமதி அட்டைக்கு மண்ணெண்ணெய்

வடமராட்சி கிழக்கு,டிசெ.4

கட்டைவேலி, நெல்லியடி ப.நோ. கூட்டுறவுச் சங்கம் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவிருக்கும் மாணவர்களுக்குப் பிரத்தியேகமாக ஒரு லீற்றர் மண்ணெண்ணெயை வழங்கிவருகின்றது.

பரீட்சை அனுமதி அட்டையைச் சமர்ப்பித்து கூட்டுறவுக்கிளைகளில் மண்ணெண்ணெயைப் பெறக்கூடியதாக உள்ளது.

(க-182)

## பொ.ஐ.மு. ஆதரவாளர் சுட்டுக்கொலை

திருகோணமலை,டிசெ.4

கிண்ணியா, கச்சக்கொடித்தீவுப் பகுதியைச் சேர்ந்த பொ.ஐ.மு. ஆதரவாளர் ஒருவர் சனிக்கிழமை மாலை துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார். இறந்தவர் நான்கு பிள்ளைகளின் தந்தையான எம்.சீ. அப்துல்லா (45 வயது) என்பவராவார்.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐ.தே.க. வேட்பாளருமான ஒருவரின் மெய்ப்பாதுகாவலரை சீனக் குடாப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்பவதினம் மாலை கச்சக்கொடித் தீவுப்பகுதியில் பொ.ஐ.மு. தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது மின்சாரம் தடைப்பட்டது. திட்டமிட்டே மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகக் கருதிய பொ.ஐ.மு. ஆதரவாளர்கள், அப்பகுதியில் வந்த மாற்றுக் கட்சிக்காரர்களைத் தாக்கினர். இறுதியில் துப்பாக்கிச் சூடு நடந்தது என்று கூறப்படுகிறது.

இதன் எதிரொலியாக மு.கா. கிளைகள் சில சேதப்படுத்தப்பட்டன. நகரில் பதற்றம் நிலவியது. அதனால் பிரசாரங்கள் ஓய்ந்தன.

பொதுத்தேர்தல் பிரசாரங்கள் நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் முடிவுற்றன. பொ.ஐ.முன்னணி, ஐ.தே.க., ஜே.வி.பி., புதிய இடதுசாரி முன்னணி என்பன இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நேற்று முன்தினம் மாலை நடத்தின.

ஏனைய கட்சிகளும் பிரசாரக் கூட்டங்களை ஆங்காங்கே நடத்தின. (க)


## ஐக்கிய தேசியக் கட்சி

தேர்தல் - 2001

அல்லல் அறுத்து ஆனந்தமாக்க

தங்கள் பொன்னான வாக்குகளை

எமக்களியுங்கள்.





தி.மகேஸ்வரன் இல. 4 முதன்மை வேட்பாளர்

எல்.திலகநாயகம் போல் இல. 9 ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்.

(94862)


## 16ஆம் ஆண்டு
## நீங்காத நினைவலைகள்



தோற்றம் 14 - 12 - 1924

மறைவு 04 - 12 - 1985

### அமரர் E.K.சண்முகநாதன்

*(ஓய்வுபெற்ற முன்னாள் கல்விப் பணிப்பாளர்)*

*மனிதப் பிறவியெனும் மாண்புடைய பிறவி*
*அதைப் புனிதப்பிறவியாய் செய்வதே பேரின்பம்*
*என்றுமைய வாழ்ந்துகாட்டிய பெரியோனே!*
*உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில்.*

*உங்கள் பிரிவால் துயருறும்:*
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*நியூதாரங்கி,*
*109, பலாலி வீதி,*
*திருநெல்வேலி.* (95499)


## நாடாளுமன்றத் தேர்தல் - 2001

யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரவிவாழும் எனதன்புக்குரிய வாக்காள நண்பர்களே! உறவினர்களே! அன்பர்களே! ஆதரவாளர்களே! நான்சார்ந்து நின்ற, நிற்கின்ற பல துறைகளில் என்னுடன் இணைந்து பணியாற்றிய உங்கள் எல்லோரையும் நேரில் சந்தித்து எனக்கு ஆதரவு தேட முயன்றபோதும், இந்தக் குறுகிய காலத்தில் அது சாத்தியமான ஒன்றாக இருக்கவில்லை.

எனவே, நான் இதுவரை சந்திக்காதவர்கள் இந்தச் செய்தி மூலம் நான் உங்களை நேரில் சந்தித்ததாகக் கருதி எனக்கும், என்னைச் சார்ந்த அணிக்கும் வாக்களித்து எம்மை நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யுமாறு வேண்டுகின்றேன்.

நாகரிகமான முறையில் நான் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டதை நீங்கள் அறிவீர்கள். அதேபோல எப்பொழுதும் இந்த மண்ணில் உங்கள் மத்தியில் வாழ்ந்து சேவை செய்வேன் என உறுதியளிக்கின்றேன்.



தமிழர் விடுதலைக் கூட்டணி

| 1 | 2 | 3 | 4 | 5 (X) | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

பணிவன்புடன் சீ.வீ.கே.சிவஞானம்

(95507)



## எமது தெரிவு சுரேஷ் பிரேமச்சந்திரன்



எமது ஆதரவுடன் ஆற்றல் உள்ள இளைய தலைமுறை,
சலுகைகளை எதிர்த்து உரிமைக்கு குரல் கொடுப்பவன்,
20,000 போராளிகளின் தியாகங்கள் வீண்போகக் கூடாது என நம்புபவன்,
75,000 மக்களின் இழப்புக்களுக்கு அர்த்தம் இருக்க வேண்டும் எனச் சிந்திப்பவன்,
தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயாதிக்கங்களை உலகமெல்லாம் பறைசாற்றும் வல்லமை உள்ளவன்,
தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை நிலைநிறுத்தப்பட வேண்டுமென்பதில் விடாப்பிடியான உறுதிகொண்டவன்,
தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேசுவதன் மூலம்தான் தமிழ் மக்களுக்கு கௌரவமான தீர்வும்,
சமாதானமும் கிட்டும் என வட-கிழக்கெங்கும் முழங்கி வருபவன்,
விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்துக்கு இணையாக
தமிழ் மக்களின் எழுச்சிப் போராட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும் எனக் குரல் கொடுப்பவன்,
நாடாளுமன்றத்திலும், அதற்கு வெளியிலும், தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளுக்குக் குரல் கொடுக்கக் கூடியவன், முன்னாள் முதல்வர் பெருமாள் செய்த அயோக்கியத்தனங்களுக்கெல்லாம்,
தானும் அக்கட்சியில் இருந்தவன் என்பதற்காக மக்கள் மத்தியில் பல தடவைகள் மன்னிப்பு கோரிய நேர்மையாளன்,
நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாத பொழுதும் பேரினவாத அரசாங்கங்களை, அவர்களின் போலித்தனமான தீர்வுத்திட்டங்களைக் கடுமையாக எதிர்த்தவன் அவனே.

ஐக்கியத்தை உருவாக்க கடுமையாக உழைத்தவனை ஐக்கியத்தை வலுப்படுத்தி தமிழன் குரல் ஒரே குரலாக ஒலிக்க, தமிழர் கூட்டணியின் சின்னமான உதயசூரியனுக்கும்,

**சுரேஷ் பிரேமச்சந்திரனின்** இலக்கமான 4 மேலும் புள்ளடியிட்டு,

மிகப்பெரும்பான்மையான வாக்குகளால் தெரிவுசெய்வோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி


| 1 | 2 | 3 | 4 (X) | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

சுதந்திர மாணவர் அமைப்பு
யாழ்.மாவட்டம்.

(C/19610)

# கூட்டமைப்பின் வெற்றி - ஒற்றுமையின் வெற்றி!!

## முதன்மை வேட்பாளரை மிக அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெறச் செய்வோம்!!



– இவர் வெறும் சம்பிரதாயத்துக்காக அரசியல் செய்பவரல்லர்.

– எம்மக்களுக்காகத் தன்னை முழுக்க முழுக்க அர்ப்பணித்தவர்.

– ஓய்வூதியம் ஒன்றைத் தவிர, வேறு எதுவித வருவாயுமின்றிக் கட்சிக்காகவே உழைத்தவர்.

– ஈ.பி.டி.பியினரின் அக்கிரமங்களை துணிந்து நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்தியவர்.

– தன் உயிருக்கு அச்சுறுத்தல் வந்த போதிலும் எவரையும் கண்டிக்கத் தவறாதவர்.

– தமிழ் மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைத் தப்பாமல் செய்தவர்.

– தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியை ஆரம்பித்தார். தந்தை செல்வா தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார். இரண்டு கட்சிகளும் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை அமைத்தன. பெரு விருட்சம்போல் நின்ற த.வி.கூட்டணியின் பக்க வேர்கள் அறுந்துநின்றவேளை, தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டவர் இவர்.

– இன்று மீண்டும் தளிர்த்துநிற்கும் த.வி.கூட்டணி - நான்கு கட்சிக் கூட்டமைப்பில் ஒன்றிணைந்து தேர்தலில் குதித்திருக்கும் வேளையில், முதன்மை வேட்பாளராக நிற்பவர்.

– என்று, தன்னைத் தமிழ் மக்களோ அன்றித் தமிழீழ விடுதலைப் புலிகளோ அரசியலில் இருந்து ஒதுங்கச் சொல்கின்றார்களோ, அந்த நிமிடமே தான் ஒதுங்கத்தயாரென உறுதியளித்த,

## வீ.ஆனந்தசங்கரி அவர்களை நாம் இத்தேர்தலில் பெருவெற்றியடையச் செய்வோம்!

## தமிழர் விடுதலைக் கூட்டணி ✕

## வீ.ஆனந்தசங்கரி 3 ✕

- காரை. மணிகண்டன்

(C/19626)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இலக்கியக் கட்டுரைகள்

O/L மாணவர்களே! உங்களது பாட நூல்களில் உள்ள சிறுகதைகள், 'பொருளோ பொருள்' நாடகம், 'வீடற்றவன்' நாவல் எல்லாவற்றிற்கும் விளக்கங்களும் விமர்சனமும் எழுதியிருக்கிறார் எல்லா வகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை.

(95500)

## SPOKEN ENGLISH

அடிப்படையில் இருந்து ஆங்கிலம் பயில, தபால் மூலமும், விக்னேஸ்வரன் ஆச்சாரி, நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை, (நாகலிங்க சுவாமிகள் நினைவு மண்டபம் அருகில்); 426, (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(95474)

## தவறிவிட்டது

ஸ்ரீ நாராயண கிராம மு.சங்க வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் எனும் முகவரியுடைய சிவகுரு தெய்வேந்திரா என்பவருடைய விசேட அ.அ., யா/பல்கலைக்கழக ஊழியர் அ.அ. என்பன கோண்டாவில் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(95580)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32 வயது, மூல நட்சத்திரம், கனடாவில் பிரஜாவுரிமை பெற்ற அழகிய மணமகனுக்கு நற்குணமுள்ள, படித்த, ஓரளவு உயரமான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சுய விவரம் மற்றும் ஜாதகங்களுடன் உடனே தொடர்பு கொள்ளவும். விள.இல.1411, மே/பா. உதயன்.

(95584)

# குடும்பஸ்தரைக் காணவில்லை

ஈவினைப் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரைக் காணவில்லை என்று அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.செயலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. புன்னாலைக்கட்டுவன், ஈவினையைச சேர்ந்த பெயதம்பி சக்தியதாசன் (வயது 39) என்பவரே காணாமற்போனவராவார். மனநோயாளியான இவரைக் கடந்த மாதம் 15ஆம் திகதி தொடக்கம் காணவில்லை என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(க-10-8)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு அமைச்சர் **K.N.டக்ளஸ் தேவானந்தா** அவர்கள் தனித்துவமான முறையிலும், ஒன்று கூடல் வகையிலும் சந்தித்து எங்களுடைய பிரச்சினைகளை உடனுக்குடன் தமது சேவையினூடாகத் தீர்த்து பூர்த்திசெய்து தருகிறார்கள். எனவே அதன் பயனாகத் தெல்லிப்பழை கிழக்கு, துர்க்காபுரம் ஆகிய கிராமஅலுவலர் பிரிவில் அமைந்துள்ள சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், நூல்நிலையங்கள், ஆலயங்கள் மற்றும் வீதிகள் முதலியவற்றின் அபிவிருத்தி போன்றவற்றிற்கு நிதி உதவி வழங்கியதால் எங்களுடைய தேவைகள் பூர்த்தியடைந்து வருகின்றன.

*நிதி உதவி பெற்ற நிலையங்களின் விவரம் வருமாறு:–*

| | | | |
|---|---|---|---|
| 01. | சந்திர மௌலீஸ்வரர் ஆலயம், கோயிற்புலம் | - | 700,000/= |
| 02. | பாரதி சனசமூக நிலையம், கோயிற்புலம் | - | 200,000/= |
| 03. | பேச்சி அம்பாள் ஆலயம், கோயிற்புலம் | - | 100,000/= |
| 04. | பேச்சி அம்பாள் ஆலயம், தம்பியற்புலம் | - | 75,000/= |
| 05. | வைரவர் ஆலயம், குளக்கரை | - | 125,000/= |
| 06. | யா/கட்டுவன்புலம் மகாவித்தியாலயம், கட்டுவன் | - | 10,00,000/= |
| 07. | கலைச்செல்வி சனசமூக நிலையம், சித்தியம்புளியடி | - | 250,000/= |
| 08. | அண்ணமார் ஆலயம், சித்தியம்புளியடி | - | 125,000/= |
| 09. | வைரவர் ஆலயம், கட்டுவன் றோட், சித்தியம்புளியடி | - | 100,000/= |
| 10. | ஞானவைரவர் ஆலயம், கட்டுவன் றோட், தொந்தனை | - | 100,000/= |
| 11. | திருவள்ளுவர் சனசமூக நிலையம், துர்க்காபுரம் | - | 200,000/= |

இவற்றிற்கு நிதி உதவி வழங்கிய பெருந்தகைகளுக்கு எமது உளங்கனிந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்தோடு எதிர்வரும் தேர்தலுக்கு எமது வாக்குகளை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) யினர்க்கே அர்ப்பணிப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"எங்கள் தலைவர் டக்ளஸ் தேவானந்தா";
எங்கள் சின்னம் வீணைச்சின்னம்"

X

- நிலையங்களின் நிர்வாகிகள்.

(95517)



## மனதார வாழ்த்துகின்றோம்



பேராசிரியர்

**ப.கோபாலகிருஷ்ண ஐயர்**

இதுவரை காலமும் இந்து நாகரிகத்துறையின் பெரும் தலைவராக இருந்து, தாங்கள் செய்த சேவையை மேலும் மெருகூட்டும் வகையில் தற்பொழுது கலைப்பீடாதிபதியாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டமையையிட்டு தங்களை மனதார வாழ்த்துவதில் நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

தாங்களின் பணி தொடர்ந்தும் சிறந்து விளங்க எல்லாம்வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரன் துணைபுரிவாராக.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(95583)



## நன்றியுணர்வோடு பாராட்டி வாழ்த்துகின்றோம்

மாகியம்பதி புனித செபஸ்தியார் ஆலயம்

மேற்படி ஆலய புனரமைப்புப் பணிகளுக்காக நிதியுதவி வழங்கிய மேதகு பெருந்தகைகளான



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும் -

முன்னின்றுழைத்த மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர்
உயர்திரு.
**வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்**
(ஜீவா)



அவர்களையும் -



வலி.வடக்கு ஈ.பி.டி.பி. அமைப்பாளர்
உயர்திரு.சிவகுமார்
(வேலு)
அவர்களையும் -

*நன்றியுணர்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

- ஆலய பரிபாலன சபையினர்.

மாகியம்பதி புனித செபஸ்தியார் ஆலயம்.

(95581)





# அன்பார்ந்த வாக்காளப் பெருமக்களே! என் இனிய நெஞ்சங்களே!

கடந்த 28-11-2001 புதன்கிழமை ஊர்காவற்றுறையில் ஏற்பட்ட கோரத் தாக்குதல் காரணமாகப் படுகாயமடைந்திருப்பதனால் நேரில் வந்து சந்தித்து தங்களின் வாக்குகளைக் கேட்கமுடியவில்லை. இதனை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

நான் மீண்டும் உயிர்தப்பியிருப்பது நம் தமிழ் தேசத்தின் விடுதலைக்கும் எம் தமிழ் மக்களின் விடிவுக்கும் போராடுவதற்காகத்தான். இந்த இலட்சியத்திற்காக என்னை மீண்டும் அர்ப்பணிக்கின்றேன்.





உங்கள் வாக்கை உதயசூரியனுக்கு அளித்து, எங்கள் அணியை வெற்றிபெறச் செய்வதுடன் எனது இலக்கம் 12இன் மேல் புள்ளடியிட்டு என்னையும் தெரிவுசெய்யுமாறு பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

## இல. 12

| தமிழர் விடுதலைக் கூட்டணி | | | | | | | | | X |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | ~~12~~ | | | | | | | | |

- மாவை சோ.சேனாதிராஜா.

(95515)

கரவெட்டியைப் பிறப்பிடமாகக்
கொண்டவரும் நீண்டகாலமாக
சமூக சேவை செய்பவரும்
மனித உரிமையாளருமாகிய

# செல்வி
# மகேஸ்வரி வேலாயுதம்

(சட்டத்தரணி)

உடுப்பிட்டித் தொகுதி வேட்பாளராக
நிற்பதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி
அடைகின்றோம்.



மாணவப் பருவத்திலிருந்தே இவர் தன்னை
ஈழத் தமிழர் போராட்டத்திற்காக அர்ப்பணித்து ஆற்றிய சேவைகள் ஏராளம் ஏராளம்

1977 இல் இருந்து இன்று வரைக்கும் தனக்கென வாழாது
தமிழினத்துக்கென்றே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒரே பெண்மணி இவர்.

எத்தனையோ அச்சுறுத்தல்கள் நெருக்கடிகளின் மத்தியிலும்
இவர் தனியாளாக நின்று அளப்பரிய சேவைகள் செய்துள்ளார்.

இலங்கை வரலாற்றிலேயே முதல் முதலாக சர்வதேச சமூகத்தை
செம்மணிக்கு கொண்டு வந்த பெருமைக்குரியவர்.

96 இன் சம்பவங்கள 97 உடன் முடிவுக்குக் கொண்டு வருவதில்
இவர் ஆற்றிய செயல்கள் போராட்டங்கள் சர்வதேசமும் அறிந்தவை.


ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு இலவச சட்ட உதவி புரிந்ததுடன் நூற்றுக்கணக்கானவர்களுக்கு பிணைப்பணமும் செலுத்தி எல்லோரையும் யாழ்ப்பாணத்தில் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைத்தவர்.

இவர் ஆற்றிய சேவைகளை பக்கம் பக்கமாக எழுதலாம். பெண்மணியாக இவர் நடத்திய போராட்டங்கள் உலகறிந்த உண்மைகள். இன்றைக்கு இலங்கையின் வடக்கில் மட்டுமல்லாது கிழக்கு, தெற்கிலும் மனித உரிமைகள் மேம்பட்டு இருப்பதற்கு இவர் ஆற்றிய சேவைகளும் ஒரு காரணம்.

இப்பொழுது தனது பிறந்த பூமிக்கு வந்திருக்கிறார். எமது பிரதேசமும் இவரது
சேவைகள் பெற்று முன்னேறுவதற்கு, இவரை நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்து
அனுப்புவது எமது கடமையாகும். எதிர்வரும் தேர்தலில்
இவரை பெரும்பாலான வாக்குகளால் தெரிவு செய்து அனுப்புவதன் மூலம்

## யாழ்ப்பாணத்தில் முதல் பெண் நாடாளுமன்ற பிரதிநிதியை

அனுப்பிய பெருமை எமது உடுப்பிட்டி வாழ் மக்கள் பெற இருக்கின்றனர். இந்த
வரலாற்றுச் சாதனையுடன், இவரது சேவையும் எமக்கு கிடைப்பதற்கு



எதிர்வரும் தேர்தலில்
**எல்லோரும் வீணைக்கு**
நேரே புள்ளடி போட்டு
வெற்றியடையச் செய்வோமாக.

# கரவெட்டி வாழ் மக்கள்

(9 5527)

## ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு எதிராக

# சிங்கள மக்கள் கிளர்ந்தெழாத வரையில் தமிழரின் போராட்டம் நீடிக்கவே செய்யும்!

## ஐக்கிய சோஷலிசக்கட்சி வேட்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிசெ. 4

இனப்பிரச்சினைத் தீர்வை வலியுறுத்தி பெரும்பான்மை இனமக்கள் அரசுக்கெதிராகக் கிளர்ந்தெழாதவரை தமிழர்களது போராட்டம் நீடிக்கவே செய்யும்.

—இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய சோஷலிசக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் க. தேவதாஸன்.

கட்சியின் தேர்தல் நிலைப்பாடுகள் தொடர்பாக விளக்கமளிப்பதற்கு யாழ். பஸ்ரியன் ஹோட்டலில் சனிக்கிழமை பத்திரிகையாளர்களுடனான சந்திப்பு ஒன்றை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

"புலிகளே தமிழினத்தின் ஏகப் பிரதிநிதிகள்" எனப் பிரகடனம் செய்வதாலோ அல்லது இன்றைய ஆளுங் கட்சியை வீழ்த்தி இன்னொரு கட்சியை ஆட்சிப்பீடம் ஏற்றுவதாலோ தமிழினத்திற்கு தன்னுரிமை கிடைத்துவிட மாட்டாது.

### சாதித்தது என்ன?

நாடாளுமன்றத்திற்கு வெளியே தீர்க்கப்படவேண்டிய ஒரு விடயத்தை நாடாளுமன்றத்தின் மூலம் தீர்த்துவிட முடியும் என மயக்கும் வார்த்தைகளை அள்ளி வீசி மக்களின் வாக்குப்பலத்தால் தனியாகவும், கூட்டாகவும் நாடாளுமன்றம் போய் வந்தவர்கள் இதுவரை சாதித்தது என்ன? இவர்கள் மீண்டும் மீண்டும் தமிழரை ஏமாற்றுவதுடன், தனியே வாக்களிக்கும் இயந்திரங்களாகவே மக்களைக் கருதுகின்றனர்.

எமது கட்சி கடந்த ஒரு தசாப்தகாலமாக இயங்கி வருகின்றது. எனினும் தேர்தல் களத்தில் தற்போதுதான் கால்பதித்துள்ளது. பெரும்பான்மை இன மக்கள் மத்தியில் தமிழினம் சார்பில் விசுவாசத்துடன் இயங்கக்கூடிய கட்சி - ஐக்கிய சோஸலிஸக் கட்சி மட்டுமே.

ஏனைய கட்சிகளுக்கு அத்தகைய சிந்தனையோ, உணர்வோ இருப்பதாகக்கூடத் தெரியவில்லை. இக்கட்சி தமிழின சுயநிர்ணய உரிமை தொடர்பாகவும், விடுதலைப் போராட்டம் பற்றியும் பரந்த அளவிலான பிரசாரத்தை முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கின்றது.

உலகில் 35 இற்கும் மேற்பட்ட நாடுகளில் எமது கட்சி செயற்பட்டு வருகின்றது. புலிகள் தடை செய்யப்பட்டுள்ள நாடுகளில் இந்தக் கட்சி புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் எனக் கோரி போராட்டங்களை நடத்திவருகின்றது.

தமிழினத்தின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டு, யுத்தம் நிறுத்தப்பட்டு, சுயநிர்ணய அடிப்படையிலேயே தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் எமது கட்சி உறுதியாக உள்ளது.

சோஷலிஸக் கட்சி என்பது தமிழருக்கு அனுதாபம் காட்டும் கட்சியோ அல்லது பெரும்பான்மை இன மக்களுக்கு விரோதமான கட்சியோ அல்ல.


பேரினவாத அரசுகள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஒருபோதும் அங்கீகரிக்கப் போவதில்லை என்பதில் எமது கட்சி மிகவும் தெளிவாக உள்ளது.

சுயநிர்ணய உரிமை என்ற விடயத்தில் எந்தவித ஒளிவு மறைவுமில்லாது, சிங்கள தமிழ்த் தேசங்களின் ஒன்றியமே இலங்கை என்றஇலக்கை வென்றெடுப்பதே எமது நிலைப்பாடு.

சுதந்திரம் என்பது தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற அனைத்துக் கொடுமைகளிலிருந்தும் அவர்களை விடுவிப்பதாக இருக்க வேண்டும். அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடும் அதே வேளை பிரதேச ரீதியான, வாதங்கள், மதரீதியான மற்றும் சாதி ரீதியான வாதங்களில் இருந்தும் விடுவிக்கப்பட்ட தமிழ்த் தேசமாக இது மலர வேண்டும்.

### வீர வணக்கம்

மாவீரர் நாளில் வீரமரணடைந்த போராளிகளுக்கு வீர வணக்கத்தைச் செலுத்தும் அதேவேளை — அதற்கும் அப்பால் மேன்மேலும் எமது இளைஞர்கள் வீரமரணத்தை



க. தேவதாஸன்

தழுவுவதை தடுக்கின்ற செயலிலும், அதாவது அதற்காச நரம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தமிழ் இளைஞர்கள் தம்மை அழித்து எம்மை வாழ வைப்பார்கள் என்று குளிர்காய்ந்து கொண்டிருப்பதை விட — அதற்கான எமது பங்களிப்பு எவ்வாறு அமைய முடியும் என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும். அதற்காக நாம் குடும்பம் குடும்பமாக வீதியில் இறங்கிப் போராடவும் தயங்கக் கூடாது.

### ஐந்து அம்ச வேலைத் திட்டம்

மக்கள் போராட்டத்தை முன்னெடுப்பதற்காக எமது கட்சி ஐந்து அம்சங்களைக் கொண்ட வேலைத்திட்டத்தை முன்வைத்துள்ளது. உடனடியான யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தி, அதனை நிரந்தர யுத்த நிறுத்தமாக மாற்றுவதே எமது பிரதான அம்சம். அதாவது இந்த யுத்தநிறுத்தம் நாடாளுமன்றக் கால் நகர்த்தல்கள் மூலம் ஏற்படுத்தப்படுவதல்ல. வெகுஜன அமைப்புகள், தொழிற்சங்கங்கள், அரசியற் கட்சிகள் யாவற்றையும் ஒன்றுதிரட்டி அனைத்து மக்களுமே யுத்தத்திற்கு எதிரானவர்கள் என்பதை பிரகடனம் செய்வதன் மூலமாகவே அது முன்னெடுக்கப் படும்.

புலிகள் மீதான தடையை நீக்கவும், தமிழினத்தின் தன்னுரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்கவும் வேண்டி பெரும்பான்மை இன மக்கள் மத்தியில் சென்று ஆதரவு திரட்டுவோம்.

இதுவரை காலமும் நாடாளுமன்றம் சென்று வந்தவர்கள் அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே, கனடா இந்தியா போன்ற நாடுகளுக்குச் சென்று புலிகளின் தடையை நீக்குமாறு கோரினார்களே தவிர ஒரு தடவையேனும் தென்னிலங்கை மக்களிடம் சென்று தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்திற்கு ஆதரவுதிரட்டவில்லை. இது மிகவும் தவறான அணுகுமுறையாகும். எமது உரிமைப் போராட்டத்தை முதலில் அங்கீகரிக்க வேண்டியது பெரும்பான்மை இன மக்களே!

### புலிகளின் தடைக்கு நீலன் தான் சூத்திரதாரி

புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் அமெரிக்கா சேர்ப்பதற்கு பிரதானமாக நின்று பின்னணியில் செயற்பட்டது தமிழர் விடுதலைக் கூட்டணியே.

அமைச்சர் கதிர்காமர் மூலமாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், அமெரிக்க அதிபருக்கும் அறிமுகமான கலாநிதி நீலன் திருச்செல்வமே இதன் பிரதான சூத்திரதாரி ஆவார். நீலனின் இறப்பிற்கு அமெரிக்க அதிபர் கூட அனுதாபம் தெரிவித்தது யாவரும் அறிந்ததே.

புலிகளின் தடைக்குக் காரணமாக அமைந்த தமிழர் கூட்டணி, அதற்கான தார்மீகப் பொறுப்பை ஏற்காது- அதற்காக மன்னிப்புக் கோராது இன்று 'புலிகளே ஏகப்பிரதிநிதிகள்' என்று பிரசாரம்செய்வதுநகைப்பிற்கிடமானது ஆகும். புலிகளைத் தடை செய்ய வைப்பதின் மூலம் அவர்களைப் பலவீனப்படுத்தி, பேச்சு மேசைக்கு வரவைக்கலாம் என்று நீலன் எண்ணியிருந்தார்.

நாடாளுமன்றத்திற்கு வெளியே பல போராட்டங்களை முன்னெடுத்து வரும் அதேவேளை, நாடாளுமன்றத்தையும் அதற்கு உதவியாகப் பயன்படுத்தும் ஆற்றலும், ஆளுமையுமிக்க ஐக்கிய சோஷலிஷக் கட்சிக்கு அங்கீகாரம் தரும்படி மக்களைக் கேட்கிறேன்.

வீட்டுக்கு ஒருவர் எமது கட்சிக்கு வாக்களிப்பதன் மூலம் அடங்காத் தமிழரையும், புரட்சித் தமிழரையும் உருவாக்கி கைக்கோர்க்கச் செய்வீர்கள் என நம்புகிறோம்-என்று அவர் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் வேட்பாளர்களான கி. கயிலசேகரன் மற்றும் தே. சுபத்திரா ஆகியோரும் கலந்து கொண்டனர். (க-9-4)

## பேரம்பலத்தின் பிள்ளைகளுக்கு நிதியம் ஆரம்பிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 4

தீவகத்தில் தேர்தல் பிரசாரப் பணிக்காகச் சென்றிருந்த வேளையில் குண்டர்களால் மிலேச்சத்தனமாகப் படுகொலை செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர் ஏரம்பு பேரம்பலத்தின்பிள்ளைகளின் பெயரால் நிதியம்ஒன்றினைத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்த நிதியத்துக்கு கொழும்பு வாழ் தமிழர் விடுதலைக்கூட்டணி ஆதரவாளர்களால் ஒருலட்சம் ரூபா பணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்நிதியினை ஆரம்ப நிதியாகக் கொண்டு ஆரம்பிக்கப்படவுள்ள நிதியத்துக்குத் தமது பங்களிப்பினை வழங்கவுள்ளவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான பூரண விவரங்கள் விரைவில் பத்திரிகைகளில் வெளியிடப்படும் என்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

நிதியத்துக்குத் தமது பங்களிப்பை வழங்குவதற்கெனப் பல தரப்பினரும் ஆர்வம் காட்டி வருவதாகவும் அதன் மூலம் கிடைக்கின்ற பணத்தினை அமரர் பேரம்பலத்தின் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வுக்குப் பயன்படுத்தவுள்ளதாவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-10-180-ம்)

## தங்கக் கிரீடம்

யாழ்ப்பாணம், டிசெ. 3

பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் செயலாளரும், கலை அபிமானியுமான செல்லையா மெற்றாஸ்மயில் பாரம்பரிய கலைகளின் புத்துயிர்ப்புக்கு ஆற்றிவரும் சேவையைப் பாராட்டித் தங்கக் கிரீடம் அணிந்து கௌரவிக்கப்படவுள்ளார்.

யாழ், குடாநாட்டைச் சேர்ந்த கலைஞர்கள், கலை அபிமானிகள் ஒன்றிணைந்து இந்தக் கௌரவிப்பு விழாவை நடத்தவுள்ளனர் என விழாக் குழுத்தலைவர் பொன். தர்மேந்திரன் தெரிவித்தார்.

இதோ!

## வந்துவிட்டன - விற்பனைக்கு

2002 ஆம் ஆண்டுக்கான கண்கவர் வண்ணப்படங்களுடன் கொம்பியூட்டமென்ற் கலண்டர்கள் விற்பனைக்கு வந்துவிட்டன.

தொடர்பு:-

பட்டாபி படமாடம்
இல. 64, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(95582)

## கூறுவிலை கோரல்

யாழ்ப்பாணம் பொது நூலகக்கட்டட உள்சுவரில் நிலமட்டத்திலிருந்து 2' — 6'' உயரத்தில் 4' — 9'' விட்டமுள்ள வட்டத்திற்குள் திருவள்ளுவர்பெருமானின் திருவுருவம் சிமெந்துக் கலவையினால் அமைப்பதற்கு கூறுவிலை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்குரிய சகல பொருள்களும் கட்டடத் திணைக்களத்தினால் வழங்கப்படும். தகுதியானவர்கள் 10-12-2001 ஆம் திகதிக்கு முன் கீழ்க் குறிப்பிட்டுள்ள முகவரியில் மேலதிக விவரங்களுக்கு காரியாலய நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

பிரதான பொறியியலாளர் காரியாலயம்,
கட்டடங்கள் திணைக்களம்,
46, சோமசுந்தரம் அவெனியூ,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(சி/19627)

## கண்ணீர் அஞ்சலி

### செல்லையா செல்லச்சாமி

(பொறியியலாளர்)


எமது சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினரும், முன்னாள் உபதலைவருமான செல்லையா செல்லச்சாமி (பொறியியலாளர் – ஆலைப் பகுதி) அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் இவ்வேளையில் அமரர் செல்லச்சாமி ஐயா அவர்கள் கடந்த 3௦ வருடங்களுக்கு மேலாக காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலைக்கும் ஊழியர்களுக்கும் ஆற்றிய தன்னலங்கருதாச் சேவையினை நினைவுகூர்வதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கம்,
காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை,
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்.

(95591)

## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001 யாழ்.மாவட்டம்

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்





## முபீன்

முன்னாள் யாழ்.மாநகர சபை உதவி மேயரும் அகில இலங்கைத் தமிழ் பேசும் உபதபால் அதிபர் சங்கத்தினை நிறுவியவருமான காலஞ்சென்ற காதர் (மெக்சா) அவர்களின் புதல்வனாகிய நான் யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவனாவேன். பாடசாலையில் எனக்கு அறிவூட்டிய தமிழ் ஆசிரியர்கள், என்னுடைய சக மாணவர்கள் மூலம் தமிழ் - முஸ்லிம் உறவின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டவன். 1978இல் இருந்து 1983 வரையும் நான் சார்ந்திருந்த கட்சியின் மூலம் இன, மத பாகுபாடு அற்ற வகையில் 1978 - 1983 கால கட்டத்தில் வங்கி, ஆசிரியர்கள், கிராம சேவையாளர்கள், ஆஸ்பத்திரி ஊழியர்கள், பல்வேறு திணைக்களங்களில் லிகிதர்கள், காங்கேசன், பரந்தன் தொழிற்சாலை உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் என்று பலதரப்பட்ட நியமனங்களை எவ்வித இன, மத பாகுபாடும் இன்றி வழங்கியுள்ளதை இன்றும் இச்சேவையில் இருக்கும் மக்களே சாட்சிபகர்வர். இனப் பாகுபாடற்ற எனது இலட்சியத்தின் வெளிப்பாடாக ஒரு தமிழ் மங்கையையே திருமணமும் செய்துள்ளேன்.

இந்திய இராணுவம் யாழ்.நகரைக் கைப்பற்றி உணவு, தொலைபேசி, போக்குவரத்துகள் சீரற்று, மக்கள் சிரமமுற்ற வேளையில், வடமாகாண லொறிச் சங்கத்தை நிறுவி, யாழ் - கொழும்பு போக்குவரத்தைச் சீர்செய்து உணவு விநியோகத்தைச் சீராக்கியும் யாழ்ப்பாண மாவட்டத்திற்கே ஒரே ஒரு தொலைத்தொடர்பு சேவையை அநுராதபுரத்தில் இருந்து ஏற்படுத்தி, மக்கள் தொலைபேசிக்காகக் கொழும்புக்கு அலையும் அவலத்தை நிறுத்தினேன். 1990இல் யாழ்.கோட்டை முற்றுகைக் காலத்தில் கொழும்பில் சிக்கிக் கொண்ட மக்கள், யாழ்.வரமுடியாது தவித்து நின்ற வேளையிலும், அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்ட பற்றாக்குறையால் கள்ளச்சந்தை தலைவிரித்தாடிய போதும், தனி ஒருவனாக நின்று மக்களையும், உணவுப் பொருள்களையும் எனது லொறிகளில் மதவாச்சி, செட்டிகுளம், மடு, பூநகரி வழியாகக் கொண்டு வந்து மக்களுக்கு கொழும்பு விலைக்கே பொருள்களை விநியோகித்தேன்.

இந்திய இராணுவம் தமிழ் மண்ணில் நிலைகொண்டிருந்த போது, 1989ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு ஈரோஸ் அமைப்பு போட்டியிட முன் வந்தபோது, அவ்வமைப்பின் அபேட்சகர் பட்டியலில் முஸ்லீம் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த ஈரோஸ் பிரமுகர்களான பரா, சுதா மாஸ்ரர், மோகன், பாலநடராஜா ஐயர் போன்றோர் என்னையும் இணைத்துக்கொள்ள வேண்டிக்கொண்டபொழுது, தமிழ் பேசும் மக்களுக்காக, போராடும் நீங்கள் தமிழ் மக்களோடு ஒரே சகோதர இனமாக வாழும் முஸ்லிம்களின் நலன்களையும் புறம் தள்ளமாட்டீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. எனவே நீங்கள் போட்டியிடுங்கள் என்று கூறி, அவர்களின் வெற்றிக்கு வேண்டிய சகல தார்மீக உதவிகளையும் வழங்கினேன்.

அத்தேர்தலில் அவர்களில் 11 அங்கத்தவர்கள் தெரிவாகி நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்த வேளையில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் சக்தியாக விளங்கிய அவர்களை, அன்றைய நெருக்கடியான சூழலில் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா அவர்களுடன் பேச வைத்ததுடன் பயங்கரவாதத் தடைசட்டத்தின் கீழ் விசாரணை இன்றி. தடுத்து வைக்கப்பட்டிருந்த 42 தமிழ் இளைஞர்களை 6ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு இணங்காத வகையில் எதுவித நிபந்தனையுமின்றி விடுதலையாக்குவதற்கும் ஒத்துழைப்பு வழங்கினேன்.

மேலும் 1994ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஒருசில நூறு வாக்குகளால் நாடாளுமன்ற அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படக் கூடிய நிலையிருந்தும் கூட யாழ்.மாவட்ட தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் காலால் மிதித்து நாம் சந்தர்ப்பவாத அரசியல் நடத்தக் கூடாது என்பதில் உறுதியாக நின்று, இடம் பெயர்ந்த யாழ்.முஸ்லிம் வாக்காளர்களைத் தேர்தலை பகிஷ்கரிக்க வைத்தேன். (இது சம்பந்தமாக அந்நேரம் வெளியிடப்பட்ட பிரசுரத்தின் பிரதி தேவைப்படுபவர்கள் எனது தேர்தல் அலுவலகம் 149,கஸ்தூரியார் வீதியில் பெற்றுக்கொள்ளலாம்). இத்தேர்தலில் முஸ்லிம்கள் போட்டியிட்டிருந்தால் மூன்று அங்கத்தவர்கள் நாடாளுமன்றம் சென்றிருக்க முடியும். ஆனால் சந்தர்ப்பவாத, சுயநல அரசியல் நடத்த நாம் விரும்பவில்லை.

## அன்புள்ள வாக்காளப் பெருமக்களே!

எமது வாழ்விட அடிப்படை உரிமைகளை இழந்து, நாடோடிகளாக அலைந்து திரியும் அவலங்கள் சிரமங்களை இடம்பெயர்ந்தவர்களில் ஒருவனாகிய நானும் நன்கு உணர்ந்தவன். இதனால் ஏற்பட்டிருக்கும் கலாசாரச் சீரழிவுகள், கல்விப் புறக்கணிப்புக்கள், இளையதலைமுறையின் மனோநிலை, குழந்தைகளின் போசாக்கின்மை, நோய்கள் போன்ற பாதிப்புகளால் நமது சந்ததியே சிதைந்துகொண்டிருக்கின்றது. இதுபோன்ற எண்ணற்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு எதுவித அரசியல் அதிகாரமும் இன்றி செயற்படமுடியாது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். நான் எதுவித அரசியல் ஆரவாரமும் இன்றி, விளம்பரமோ, சுயநல நோக்கமோ இன்றிச் செயற்பட்டதை இப்பிரசுரத்தில் சுட்டிக்காட்டியுள்ளேன்.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த இனவாத அரசுகள், தமிழ் - முஸ்லிம் உறவைப் பிரித்தாலும் சதியில் ஈடுபட்டு நமது உரிமைப்போராட்டத்தை பலவீனப்படுத்தி வருவதை நாம் அனைவரும் அறிவோம். இதைத் தடுக்க நாடாளுமன்றத்தில் தமிழ் பேசும் மக்களின் தேசிய உரிமையை அங்கீகரியுங்கள். தமிழ், முஸ்லிம் என்று எங்களைப் பிரிக்காதீர்கள். நாங்கள் தமிழ் பேசும் இனம் என்று ஒற்றுமையுடன் ஓங்கிக் குரல் கொடுக்கவும், உரிமைக்காகப் போராடிய மக்களை பயங்கரவாதிகள் என்று சித்திரிக்க வேண்டாம்! பயங்கரவாதத்தடைச் சட்டத்தை நீக்குங்கள் என்று இடித்துரைக்கவும் தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒற்றுமையாகத் தமது தேசிய உரிமைக்காகப் போராடுகிறார்கள் என்று உலகிற்கு உணர்த்தவும் எல்லாவற்றுக்கும் மேலாக 2001 மாவீரர் தின உரையில் தலைவர் பிரபாகரன் கூறியுள்ள இனவாதப் பேயை ஒழித்துக் கட்டும் வேண்டுகோளை முன்னெடுத்து சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் இனவாத சக்திகளை முறியடிக்கவும், அவர்களின் சந்தேகங்களை நீக்கி எமது தமிழ் பேசும் மக்களின் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் சிங்கள இனவாதிகளின் இனவாதப் போக்கை முறியடிக்கப் பாடுபடுவேன். உங்கள் அனைவரினதும் ஆதரவை நாடி நிற்கும் என்னை,

எனது சின்னமான மரத்திற்கு நேரே [மரம் | X] புள்ளடியிட்டு,

எனது விருப்பு இலக்கமான [12 X] இற்குள் புள்ளடியிட்டு

**என்னை வெற்றிபெறச் செய்து உதவுமாறு உங்களை வேண்டி நிற்கின்றேன்.**

(95521)

# அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்



தனிப் பெருந் தலைவர்
ஜீ.ஜீ.

## தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு

"தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா".


தமிழ் நிலத்தில் தொழிற்சாலைகள் பல நிறுவித் தமிழர்க்குத் தொழில் கொடுத்து கடற்றொழில் வளம்பெருக்கி வாழ்வு தந்த வள்ளல் ஜீ.ஜீ.

தமிழர் சுதந்திரத்திற்காக உயிர் தந்த தியாகப் பெருஞ்சுடர் குமார்



மாமனிதர்
குமார்

இவர்கள் காட்டிய இலட்சிய வழியில் என்றும் உழைப்போம்.
நிரந்தர சமாதானத்துக்கும் நிலையான தீர்வுக்கும் நாம் என்றும்
ஆதரவாளர்களே!



திரு. அப்பாத்துரை
விநாயகமூர்த்தி
இல. 1

★ தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும்.
★ தமிழீழ மக்கள் மீதான பொருளாதாரத் தடை முற்றாக நீக்கப்படவேண்டும்.
★ தமிழ் மக்கள் மீதான போக்குவரத்துக் கட்டுப்பாடு நீக்கப்படவேண்டும்.
★ தமிழ் மக்கள் மீதான சகல மனித உரிமை மீறல்களும் நிறுத்தப்படவேண்டும்.
★ அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதத் தடைச் சட்டமும் நீக்கப்படவேண்டும்.
★ தமிழீழ விடுதலைப் புலிகளைத் தமிழர்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்று, சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வுகாணப்படவேண்டும். இவற்றின் மூலமே சமாதானத்தை நிலைநிறுத்த முடியும் என்பதால் இவற்றைத் தொடர்ந்து வலியுறுத்துவோம் உங்கள் பிரதிநிதிகள் என்ற உரிமையுடன்.



திரு.சீ.வீ.கந்தையா
சிவஞானம்
இல. 5

▲ எமது தமிழ் மண்ணில் தொழிற்சாலைகளை நிறுவவும், வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கவும், கடற்றொழில் வளம் பெறவும்,
▲ வலிகாமம் வடக்கு, தென்மராட்சி, தீவகம் வாழ் மக்கள் பயமற்ற சூழலில் சொந்த இடம் மீளவும், வாழவும் தொழில் செய்யவும்,
▲ ஆயுதக் குழுக்களுக்கும் அவற்றின் அடாவடித்தனங்களுக்கும் மக்கள் அஞ்சிவாழும் நிலை மாறவும்,
▲ முட்கம்பிவேலிகளுக்குள் முடங்கி வாழும் நிலை மாறவும்,
▲ சிறைவாழ்வு மற்றும் சித்திரவதை அற்ற யுகம் பிறக்கவும், கைதானவர்கள் விடுதலை பெறவும்,
▲ சொந்த மண்ணில் விவசாயம் செய்து வாழவும், சொந்தக் கடலில் மீன்பிடித்து சுகமாக வாழவும்,
▲ கல்வி, மின்சாரம், குடிதண்ணீர், வீதிப்போக்குவரத்து, சுகாதாரம், வேலைவாய்ப்பு போன்ற பல துறைகளை மேம்படுத்தவும் பாடுபடுவோம். நாம் சமாதானத்தை, உரிமை வாழ்வுடன் கூடிய சமாதானத்தையே நேசிக்கின்றோம்.



திரு.கஜேந்திரகுமார்
காங்கேசர் பொன்னம்பலம்
இல. 8

*நாங்கள் வன்முறையின் வித்துக்களல்ல,*
*ஜனநாயகத்தின் தனிச் சொத்துக்கள்*
*நெஞ்சிலே நேர்மை, கொள்கையிலே பற்று*
*இவை தாம் எம் ஆயுதங்கள்.*
*கொஞ்சு தமிழ் மண்ணிலிருந்து இராணுவம் வெளியேறவேண்டும். இதுவே எம் நிலைப்பாடு.*
*எங்கள் அரசியல் வழி நடத்தலில் என்றுமே மக்கள் பலியானதில்லை.*
*உயிரை, உடைமையை இழந்ததில்லை.*
*வரலாறு சொல்லும் உண்மை இது.*
*நெஞ்சுக்கு நீதி எனப்பட்டதை சொல்லும் அரசியல் தலைமை எம்முடையதே.*
*சுதந்திரம், சுயமரியாதை, சுய நிர்ணய உரிமை, சுபீட்சம், சமாதானம், சாந்தி நிலவ என்றும் உழைப்போம்.*

ஒற்றுமையே தமிழர் பலம்

## தமிழர் விடுதலைக் கூட்டணி

X

மாமனிதரின் கட்சிக்கே
உங்கள் மூன்று
விருப்பு வாக்குகளும்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ~~1~~ X | 2 | 3 | 4 | ~~5~~ X | 6 | 7 | ~~8~~ X | 9 | 10 | 11 | 12 |

உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களித்து கூட்டமைப்பின் அமோக வெற்றியையும் உறுதிப்படுத்துங்கள்

வாழ்க தமிழ், வளர்க தமிழ்த் தேசிய உணர்வு.

(94881)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயம்**
***சண்டிலிப்பாய் கிழக்கு.***


மேற்படி ஆலயப் புனரமைப்புக்கென 150,000/= நிதி ஒதுக்கீடு செய்து அதில் 75,000/= ரூபாவினை உடன் தந்துதவியமைக் காக,



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும் -



ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட
பிரதம அமைப்பாளராகிய
**உயர்திரு.கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும் -



மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர்
**திரு.வெலிச்சோர் அன்ரன் ஜோண்சன்**
(ஜீவா) அவர்களையும்

*நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய
பரிபாலன சபையினர்.
*சண்டிலிப்பாய் கிழக்கு.* (95598)

---

## வடமராட்சி லயன்ஸ் கழகத்தின்
## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

We Serve

**25.11.2001இல் யா/தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலை யில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பின்வரும் இலக்கங்களையுடைய சீட்டுக்குரியவர்கள் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவுசெய்யப்பட் டுள்ளார்கள்.**

| | இலக்கங்கள் |
|---|---|
| முதலாம் பரிசு | 2547 |
| இரண்டாம் பரிசு | 0142 |
| மூன்றாம் பரிசு | 1142 |

ஆறுதல் பரிசு இலக்கங்கள்

**2452, 1338, 1613, 2805, 2351,**
**2897, 2691, 3008, 0098, 1311.**

மேற்படி பரிசுக்குரியவர்கள் 09.12.2001 ஞாயிறு மு.ப. 10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபம், பருத்தித்துறையில் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின் றோம்.

*வி.சிவகுமாரன்*
செயலாளர்
வடமராட்சி லயன்ஸ் கழகம்.

***பரிசுகள் அன்பளிப்புச் செய்தவர்கள் விவரம்:***

முதலாம் பரிசு:- திரு.த.மணிதரன், மாயா கொமினிக்கேசன், *வலலிபுர குறிச்சி.*
இரண்டாம் பரிசு:- திரு.லயன்S.சிவம், சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, *நெல்லியடி.*
மூன்றாம் பரிசு:- திரு.வே.மனோகரன, *மந்திகை.*
ஆறுதல் பரிசுகள்:- திரு.லயன் கே.தங்கராசா, *ஜெயகணேசா ஸ்ரோர்ஸ் பருத்தித்துறை.*
(95596)

---

## வாக்கெடுப்பு நிலையத்திற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதியுள்ள ஆள்கள்

1. வாக்கெடுப்பு நிலைய அலுவலர் குழாம்
2. கடமையிலீடுபட்டிருக்கும் பொலிஸ் அலுவலர்கள்
3. களவேலைகளுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள்
4. தேசிய ஆளடையாள அட்டையும் முறையான நியமனக் கடிதத்தையும் வைத்திருக்கும் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் (போட்டியிடும் ஒவ்வொரு கட்சிக்கும்/சுயேச்சைக் குழுவுக்குமான அதிகூடிய எண்ணிக்கை 2ஆகும்).
5. போட்டியிடும் வேட்பாளர்கள் (வாக்கெடுப்பு நிலையத்தி னுள் ஒரு தடவையில் ஒருவர் என்ற அடிப்படையில் மட் டுமே இருக்க முடியும்).
6. ஏதேனுமொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்ப தற்கான உரித்தையுடைய பதியப்பட்ட வாக்காளர்கள்.
7. என்னால் அதிகாரமளிக்கப்பட்ட சர்வதேச கண்காணிப்பா ளர்கள்.

மேற்கூறப்பட்டோரைத் தவிர்ந்த வேறு எவரேனுமொருவர் வாக்கெண்ணும் நிலையத்திற்குள் பிரவேசித்தால் தவறொன் றைச் செய்தவராவாரென்பதுடன் சட்டத்திற்கிணங்க வழங்கப்படும் தண்டனைக்கும் ஆளாவார்.

ஆகவே நீங்கள் மேற்கூறப்பட்ட வகைகளில் எந்த ஒரு வகையிலேனும் சேராதவிடத்து வாக்கெடுப்பு நிலையத்தினுள் பிரவேசிக்க வேண்டாம்.

உங்கள் வாக்கெடுப்பு நிலையத்தினுள்ளும் சுற்றாடலிலும் அமைதிகாக்க பொலீஸுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்.

*தேர்தல்கள் செயலகம்,*
*சரணமாவத்தை,*
*ராஜகிரிய,*
*ஸ்ரீ ஜயவர்த்தனபுர.*
*2001 டிசெம்பர் 3 ஆம் திகதி*

தேர்தல்கள்
ஆணையாளர்.

(C/19633)

---

# நாடாளுமன்றத் தேர்தல் - 2001.12.05

## வாக்களித்தலும் விருப்புத் தெரிவித்தலும் பற்றிய சுருக்கமான விளக்கம்

### வாக்குச்சீட்டின் மாதிரிப்படிவம்

| | | |
|---|---|---|
| "அ" கட்சி | சின்னம் | |
| "ஆ" கட்சி | சின்னம் | |
| "இ" கட்சி | சின்னம் | |
| சுயேச்சைக்குழு 1 | சின்னம் | |
| சுயேச்சைக்குழு 2 | சின்னம் | |
| சுயேச்சைக்குழு 3 | சின்னம் | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

01 இது வாக்குச் சீட்டின் மாதிரியொன்று மட்டுமே.

02 அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் பெயர்கள், அவைகளின்சின்னங்களுடன் மேற்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு சின்னத்திற்கும் எதிரே வெற்றுக்கூடொன்று உள்ளது. இதில் ஏதேனுமொரு கூடொன்றில் உங்கள் வாக்கை அடையாள மிடலாம். வாக்களிக்கும்போது நீங்கள் விரும்பும் சின்னத்திற்கு எதிரேயுள்ள வெற்றுக்கூட்டில் "புள்ளடி"யிடல் வேண்டும்.

03 ஒவ்வொரு வேட்பாளருக்கும் பிரித்தொதுக்கப்பட்டுள்ள இலக்கங் கள் முறையே ஒரு வரிசையில் பத்து என்றவாறு கிழ்ப்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. விருப்பொன்றை அடையாளமிடும்போது, நீர் விரும்பும் வேட்பாளரின் இலக்கத்தின்மீது உங்களால் "புள்ளடி" இடப்படல் வேண்டும். வேட்பாளர்கள் மூவருக்கு மேற்படாத எண் ணிக்கைக்கு அதாவது அவ்விலக்கங்கள் மூன்றுக்கு மேற்படாத எண்ணிக்கைமீது உங்கள் விருப்பினை அடையாளமிட முடியும்.

04 வாக்கொன்று இல்லாத வாக்குச்சீட்டு செல்லுபடியற்றதாகும். அது எவ்வித பெறுமதியுமற்றதோடு அல்லாமல் நிராகரிக்கவும்படும். ஆகையினால் முதலில் வாக்கை அடையாளமிட்டு, அதன்பின் விருப்பமாயின் விருப்புக்களை அடையாளமிடுவதோ பொருத்தமானது என்பதை தயவுகூர்ந்து நினைவிற்கொள்ளவும்.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

*தேர்தல்கள் செயலகம்,*
*சரண மாவத்த,*
*இராஜகிரிய,*
*ஸ்ரீ ஜயவர்த்தனபுர.*
*2001 நவம்பர் மாதம் 26ஆம் திகதி.*

(C/19633)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



**பொன்னையா கதிரவேற்பிள்ளை**
*(முன்னாள் உரிமையாளர் அசோகா போட்டோ- யாழ்ப்பாணம்)*
தோற்றம்:- 16-07-1925.
மறைவு :- 04-11-2001
**கணவர்**



**திருமதி சின்னம்மா பொன்னுத்துரை**
மலாவு :- 15-04-1912
மறைவு :- 05-11-2001
**அன்னை**

எங்கள் குடும்பத் தலைவராகவும் ஒளிவிளக்காகவும் சுடர்விட்ட என் அன்புக்கணவரே! கண்கண்ட தெய்வமே எம்மையெலாம் பாசமுடன் வளர்த்த அன்னையே! உங்கள் பிரிவால் ஆறாத்துயரில் மூழ்கியுள்ளோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய உத்துங்க விநாயகரையும், வராகி அம்பாளையும் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (04-12-2001) செவ்வாய்க்கிழமை முற்பகல் இருவரினது நினைவாக ஆத்மசாந்திப் பிரார்த்தனை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*அரசடி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (95594)

திருமதி கணேஸ்வரி (மனைவி),
கதிரவேற்பிள்ளை குடும்பம்.

# நாடாளுமன்றத் தேர்தல் - 2001.12.05

எந்தவிதமான சுடுகலன்களையும், ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு வாக்கெடுப்பு நிலையத்திற்குள் அல்லது வாக்கெண்ணும் நிலையத்திற்குள் பிரவேசிப்பதற்கு, எவரொருவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

செலியூலர் தொலைபேசிகளை எடுத்துக்கொண்டு வாக்கெண்ணும் நிலையத்திற்குள் பிரவேசிப்பதற்கு எவரொருவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

வாக்கெடுப்பு நிலையத்திற்கு அல்லது வாக்கெண்ணும் மண்டபத்திற்கு வருகைதரும் அனைவரும் இக் கட்டளையை கட்டாயமாகக் கடைப் பிடித்தல் வேண்டும்.

**தேர்தல்கள் ஆணையாளர்.**

தேர்தல்க்ள் செயலகம்,
சரணமாவத்த,
ராஜகிரிய,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர.
2001 டிசெம்பர் மாதம் 03ஆம் திகதி.

(C/19632)

---

## நன்றியுணர்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

### புனித இராயப்பர் ஆலயம், குப்பிளான் தெற்கு

மேற்படி ஆலயப் புனரமைப்புக்கும், வீதிப் புனரமைப்புக்குமென நிதிஒதுக்கீடு செய்து உதவியமைக்காக,



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர்
உயர்திரு.க.கமலசேகரன் (பாபு)
அவர்களையும்



ஈ.பி.டி.பி.யின் தேசிய அமைப்பாளர்
திரு.பசுபதி ஜீவரத்தினம் (ஜீவா)
அவர்களையும் -

நன்றியுணர்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பங்குத் தந்தையும்,
பங்கு மக்களும்.

குப்பிளான் தெற்கு. (95595)

---

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

### சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான

திருப்பணி வேலைகளுக்காக ரூபா 300,000/= ஒதுக்கீடு செய்து அதில் 150,000 ரூபாவை உடன் வழங்கி உதவியமைக்காக,



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும் -



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
உயர்திரு.கே.வி.குகேந்திரன்
(ஜெகன்) அவர்களையும் -



வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர்
உயர்திரு.ந.திரிலோகநாதன்
அவர்களையும் -

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான
பரிபாலன சபையினர்.

(95587)

---

## முதலாம் வருட நினைவஞ்சலி

மலர்வு
12
-
11
-
1956



உதிர்வு
24
-
11
-
2000

அமரர்
**மயில்வாகனம் சிறீகாந்தன்** *(ராசு)*
*(நாவற்குழி)*

அன்புடனும் பண்புடனும் பழகிய உள்ளமே
பரிதவிக்கின்றோம் நின் பிரிவால்! ஓராண்டு கடந்தாலும்
உன் நினைவு என்றும் அகலவே அகலாது.

ஓம் சாந்தி!

*தகவல்:*
*ம.கனகரத்தினம்,*
*198/3, பொன்னப்பா லேன்,*
*யாழ்ப்பாணம்.*

- தாய், சகோதரர்கள்,
மருமக்கள்,
மைத்துனர், மைத்துனிகள்.

(95589)

---

# தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

## பொதுத் தேர்தல் - 2001

**மதிப்பிற்குரிய வாக்காளப் பெருமக்களே!**

தமிழ் மண்ணின் சில பகுதிகளில் வாக்களிக்கும் நிலையங்கள் அண்மையில் இருக்கத்தக்கதாகத் தூர இடங்களுக்கு உங்கள் வாக்களிப்பு நிலையங்கள் மாற்றப்பட்டுள்ளன.

எப்பாடுபட்டாயினும் வாக்களித்தே தீருவது என்ற உணர்வு உங்கள் மத்தியில் எழட்டும். நடந்தோ, சைக்கிளிலோ அல்லது பஸ்களிலோ சென்று தயவுசெய்து வாக்களியுங்கள்; மற்றவர்களுக்கும் உணர்வூட்டி வாக்களிக்கச் செய்யுங்கள்.

**இடம்பெயர்ந்து இன்னலுறும் வலிகாமம் வடக்கு, தென்மராட்சி, தீவகம் வாழ் மக்களே!**

உங்கள் சொந்த இடங்களில் குடியேறவும், தொழில் செய்து வாழவும், சமாதானம் பிறக்கவேண்டும். அதற்காக உழைக்கும் நாம் வெல்லவேண்டும்.

தயவுசெய்து போக்குவரத்துச் சிரமத்தைப் பாராது உங்கள் நல்வாழ்வு கருதி வாக்களிக்கத் தவறாதீர்கள்.

**இது எம் அன்பான வேண்டுகோள்!**

X

1 இன் மேல் புள்ளடியிடுக.


5 இன் மேல் புள்ளடியிடுக.

8 இன் மேல் புள்ளடியிடுக.

இப்படிக்கு
**அ.விநாயகமூர்த்தி,**
**சி.வீ.கே.சிவஞானம்,**
**ஜீ.ஜீ.பொன்னம்பலம்.**

(94881)

---



## வல்வையின் மைந்தனைத் தெரிவு செய்வோம்

- **தமிழினத்தின் விடிவுக்காகத் தன்னை அர்ப்பணித்தவன்!**
- **தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காகத் தன் உயிரையே பணயம் வைத்தவன்.**
- **இந்திய மராட்டியத்திற்கு ஒரு சிவாஜி; நம் தமிழ் தேசத்திற்கு ஒரு சிவாஜிலிங்கம்.**
- **இன்று கோழைகளால் குற்றுயிராக்கப்பட்டு மருத்துவமனையில் இருக்கின்றான்; அவன் மடிந்துவிடமாட்டான்; தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காகத் தொடர்ந்தும் போராடுவான்.**
- **தமிழ்த் தேசத்து எம் தமிழ் மக்கள் விடிவு பெற்றிட இந்தப் போர் நிறுத்தப்படவேண்டும். அதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். தமிழ்த் தேசிய இனம் தன் தாயக மண்ணில் தன்னை ஆட்சிசெய்ய வேண்டுமென குரல் கொடுக்கவும் போராடவும்...**

சிவாஜிலிங்கம் அவர்களைத் தெரிவுசெய்வோம்.

# இல. 6

**தமிழர் விடுதலைக் கூட்டணி** X 6

**- தமிழ் இலட்சிய இதயங்கள்.**

(95519)

## இலங்கை வங்கி
## வாடிக்கையாளர் அனைவருக்கும் ஓர் அறிவித்தல்

**மட்டுப்படுத்திய வேலை நேரங்கள் 2001 டிசெம்பர் 5ஆம் திகதி (நாளை) புதன்கிழமை காலை 9 மணிமுதல் 10 மணிவரை.**

**பொதுத் தேர்தலை முன்னிட்டு எமது கிளைகள் 2001 டிசெம்பர் 5ஆம் திகதி நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் பொதுமக்களின் கொடுக்கல்வாங்கல் களுக்காகத் திறந்திருக்கும்.**

**இந்த நேரத்தில் வாடிக்கையாளர் கணக்கில் வரவு வைப்பதற்கென காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படும். அத்துடன் ரொக்கப் பண வைப்புகள், மீளப் பெறுதல் ஆகியனவும் நடைபெறும்.**

பிரதேச முகாமையாளர்.
இலங்கை வங்கி.
பிரதேச காரியாலயம்.
யாழ்ப்பாணம்.
03-12-2001

பிரதான முகாமையாளர்.
இலங்கை வங்கி மேற்தரக்கிளை.
யாழ்ப்பாணம்.
(C/19635)

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 28 ☆ 12 ☆ 1947



உதிர்வு 03 ☆ 12 ☆ 2001

அமரர்
### S.சிவஷண்முகலிங்கம்
(ஷண்)
*(மணிக்குரல் மேஜர் ஷண்)*
*(ஷண் றெக்கோடிங் ஸ்பொட் உரிமையாளர்)*

**விளம்பரத்துறையிலே விளம்பரப் புயலாகத் திகழ்ந்து, தமது சிம்மக் குரலினால் மேடைகளில் ரசிகர்களைக் கவர்ந்த மேஜர் ஷண் என்னும் பெரு விருட்சம் சாய்ந்துவிட்டது. 35 வருட காலமாக விளம்பரத்துறையிலே சாதனைகள் பல படைத்து மங்காப்புகழ்பெற்ற விளம்பரப்புயல் என்னும் இனிய நாதம் ஓய்ந்துவிட்டது!**

*அன்பின் உறைவிடமே! பண்பின் இருப்பிடமே!!*
*பாசத்தின் மையமே!!*
*நட்பின் சிகரமெனத் திகழ்ந்தீர்கள்!*
*விளம்பரப் புயலாக மேடைகளில்*
*சிம்மக் குரலினால் ரசிகர்களைக் கவர்ந்தீர்கள்!*
*கலங்கினோம் செய்தி கேட்டு*
*தலைவிதி இதுவோ என்று?*
*நட்புக்கு இலக்கணம் வகுத்து நின்றீர்கள்!*
*நாளும் இனிதே பேசி நின்றீர்கள்!*
*விளம்பரத் துறையிலே மணிக்குரல் மேஜர் ஷண் ஆக நின்றீர்கள்*
*இன்று எம்மையெல்லாம் சோகக் கடலில்*
*ஆழ்த்தி விட்டுச் சென்றுவிட்டீர்களே!*

ஷண் றெக்கோடிங் ஸ்பொட்,
24/2, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.
(95603)

## மரண அறிவித்தல்

### சின்னக்குட்டி செல்லையா

வேலணை, துறையூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட சின்னக்குட்டி செல்லையா நேற்று (03.12.2001) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லம்மாவின் அன்பு கணவரும், மகேஸ்வரி (உப-தபால் அலுவலகம், வேலணை), நடேசன் (இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்), செல்வரெத்தினம் (ஜேர்மனி), மங்கேலேஸ்வரராணி (ஆசிரியை, அமி.த.க.பா. - சாந்தையடி, பண்டத்தரிப்பு), செல்வனேஸ்வரி (வேலணை ப.நோ.கூ. சங்க முன்னாள், ஊழியர்), புஸ்பகாந்தா (சுவிஸ்), செல்வத்தவம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற செ.சண்முகவடிவு (அதிபர், புங்குடுதீவு), குலநாயகி (யாழ்.போதனா வைத்தியசாலை, தாதியார்), உமா (ஜேர்மனி), செல்வநாயகம் (கௌரி அழகு மாடம்), தம்பையாராசன் (தனியார் போக்குவரத்துச் சேவை யாழ்.ஊர்காவற்றுறை), மோகன்ராஜ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2001) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாலயங்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*வேலணை மேற்கு-06,*
*துறையூர்.* (95622) செ.நடேசன் (மகன்)

## அக்கரைப்பற்றில் தேர்தல் கண்காணிப்பாளர் மீது தாக்குதல்!

அம்பாறை,டிசெ.4

தேர்தல் கண்காணிப்புப் பணிக்காகச் சென்ற உள்ளூர் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று 8 ஆவது மைல்கல் பகுதியில் நேற்றுக்காலை இந்தச் சம்பவம் நடந்தது.

இதனையடுத்து பொலீஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் இருவர் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஒரு வேட்பாளரும் அடங்குவர் என அம்பாறை சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (ஒ)


ராஜா யாழ்ப்பாணம்
மூன்றாவது வாரமாக
கமல், மனீஷா
மற்றும் பலர் நடித்த
ஆளவந்தான்
தினசரி:- 10.30,2.30 (புதிய நேரம்)
சனி,ஞாயிறு 10.30,2.5 (புதிய நேரம்)
(C/19573)

நாகம்ஸ் சுன்னாகம்
பிரசாந்த், ஷாலினி, மணிவண்ணன்
நடித்த
பிரியாத வரம் வேண்டும்
(சீல்ஸ்)
காட்சிகள் 11.00, 3.00 (புதிய நேரம்)
(95613)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
ரஜனி, பிரபு, கௌதமி
நடித்த
குருசிஷ்யன்
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.)


## மரண அறிவித்தல்கள்

### கனகசபாபதி இராசரத்தினம்
**(சித்திரமேழி சின்னண்ணை)**

சித்திரமேழி, இளவாலையைப் பிறப்பிடமாகக்கொண்ட கனகசபாபதி இராசரத்தினம் 29-11-2001 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் தங்கலட்சுமியின் அன்புக் கணவரும் நித்தியானந்தன், கற்பகதேவி (கொழும்பு), புஸ்பரத்தினம் (ஆசிரியர், கிளி/இந்துக் கல்லூரி), கலாவதி (லண்டன்), காலஞ்சென்ற மோகானந்தன் மற்றும் ஜெயானந்தன், இந்திராவதி, தர்சினிதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இந்திரவர்ணன் (சூட்டி - சுவிஸ்), சோமநாத் (லண்டன்), மோகீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கர்ஷன், விதுஷன், அபிதா ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (04-12-2001) செவ்வாய்க்கிழமை 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்திரமேழி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சித்திரமேழி, இளவாலை.* (C/19642) இ.தங்கலட்சுமி (மனைவி)

### ஆறுமுகம் வைரமுத்து
**(முன்னாள் எழுதுவினைஞர், இ.மி.ச.)**

காரைநகரைப் பிறப்பிடமாகவும் கீரிமலை வீதி, சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வைரமுத்து 30.11.2001இல் ஹொலண்டில் (HOLLAND) அகாலமரணமானார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் முரளீதரன் (வவுனியா), கமலினி,சிறீதரன் (ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.), மாலினி (ஆசிரியர், யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்.), நிரஞ்சினி (ஆசிரியர், கிளி/தர்மபுரம் ம.ம.வி.), குமுதினி (ஜேர்மனி), சுபாசினி (காரைநகர் MPCS), வினோதினி, கிருஸ்ணவேணி (ஆசிரியர், கிளி/தர்மபுரம் ம.ம.வித்.), அரவிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மாலினி, காந்தினி, வரதராஜா, ரவியேந்திரன் (லிபியா), விஜயராஜா (ஜேர்மனி), தங்கரட்ணம் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஜீபன், துஸ்டினா, வினித்தா, சஞ்சீவன், சஜீபன், குயிந்தன், சகானா, சாருகா, மதியுகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*மாளியாவத்தை,* சிறீதரன் (ஆசிரியர்)
*சங்கானை.* (95614) சி.கந்தசாமி, சித்தன்கேணி.

### கட்டையர் கனகசபை

வேலணை வடக்கு, 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கட்டையர் கனகசபை அவர்கள் நேற்று (03.12.2001) திங்கட்கிழமை வேலணையில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் தையல்நாயகியின் அன்புக் கணவரும், நாகலெட்சுமி கனகரெத்தினம், தனலெட்சுமி கணேசமூர்த்தி (உருத்திரபுரம்), யோகலெட்சுமி சபாநாதன் (ஆசிரியை, வேலணை ஆத்திசூடி), மகாலிங்கம் ( வர்த்தகர், கொழும்பு), சோதிலிங்கம் (ஜெயபுரம்), மகாலெட்சுமி சிவநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
*5ஆம் வட்டாரம்,* செல்வன் ச.பாரதி (பேரன்)
*வேலணை வடக்கு.* (95620) 1ஆம் ஒழுங்கை, பிரவுண்வீதி.




பொதுத் தேர்தல் - 05.12.2001



நாளைய வெற்றியை நமதாக்குவோம்
புதிய வரலாற்றைத் தோற்றுவிப்போம்

முதன்மை வேட்பாளர்
சி.க.செந்திவேல்
இல. 6

வேட்பாளர்
வீ.ரகுநாதன்
இல. 10

☆ பேரினவாதக் கட்சிகளின் முகவர்களைத் தோற்கடிப்போம்.
☆ தமிழர் கூட்டமைப்பின் பழைமைவாத ஆதிக்க அரசியலை நிராகரிப்போம்
☆ சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை வலுப்படுத்தி முன்னெடுப்போம்.

உழைக்கின்ற வர்க்கத்தின் உரிமைச் சின்னம்.
விழிப்புற்ற தமிழர்களின் வெற்றிச் சின்னம்
மணிக்கூட்டுச் சின்னம்





புதிய ஜனநாயகக் கட்சி
- வடமராட்சி மக்கள்

வேட்பாளர்
க.வேலும்மயிலும்
இல. 2

வேட்பாளர்
க.ஆனந்தகுமாரசுவாமி
இல. 1

(95520)



நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001, யாழ்.மாவட்டம்
நாங்கள் பெரும்பான்மை இனக் கட்சிகள் சார்பாக வாக்குக்கேட்டு வரவில்லை. உங்கள் சார்பாகவே உங்களிடம் வாக்குக்கேட்டு வருகின்றோம்.
நீதியானதும், நடைமுறைச் சாத்தியமானதுமான விரைந்த அரசியல் தீர்வு.
மக்களின் அன்றாடத் தேவைகளை பூர்த்திசெய்யும் வேலைத் திட்டங்கள்.
என்பவற்றை முன்னெடுத்துச்செல்ல உங்கள் வாக்குகளை எமக்குத் தந்திடுவீர்.
05-12-2001
ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
(புளொட்)
(95524)

# அன்பார்ந்த யாழ்.மாவட்ட மக்களே!

## மக்களை நேசித்த மாபெரும் தலைவர் தோழர் க.பத்மநாபா அவர்களின் வழியில்



அமரர்
தோழர் க.பத்மநாபா



அ.ஜோன் (பெரியண்ணன்)
(பிரதேச சபை உறுப்பினர், வலி.தென்மேற்கு.)



க.மார்க்கண்டு (கண்டர்)
(நகர சபை உறுப்பினர், சாவகச்சேரி)



க.சிவராஜா (மோகன்)
(நகர சபை உறுப்பினர், சாவகச்சேரி)



நா.ஜெயக்குமாரன் (கங்கா)
(பிரதேச சபை உறுப்பினர், நல்லூர்)



முதன்மை வேட்பாளர்
த.சுபத்திரன் (றொபேட்)
(மாநகரசபை உறுப்பினர், யாழ்ப்பாணம்)



நீ.மருசலின் (விக்ரர்)
(பிரதேச சபை உறுப்பினர், பச்சிலைப்பள்ளி)



ம.மங்களநேசன்
(மாநகரசபை உறுப்பினர், யாழ்ப்பாணம்)



வ.விக்கினேஸ்வரன் (கிருபா)
(பிரதேச சபை உறுப்பினர், சாவகச்சேரி)



மு.மனோரஞ்சன் (மனோ)
(பிரதேச சபை உறுப்பினர், வலி.மேற்கு.)



சி.தங்கராஜா (ரவி)
(பிரதேச சபை உறுப்பினர், வலி.வடக்கு.)



வ.சுந்தரம்
(பிரதேச சபை உறுப்பினர், வலி.வடக்கு.)



சே.சுந்தரமூர்த்தி
(முன்னாள் தலைவர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை)

- யுத்தம் முடிவுக்கு வர வேண்டும். இராணுவ இராஜ்ஜியம் இல்லாதாக்கப்பட வேண்டும்.
- இந்தியா உட்பட உலக நாடுகள் தமிழ் மக்களுக்கு ஆதரவாகச் செயற்படச் செய்ய வேண்டும்.
- தமிழ் மக்கள் சிங்கள மக்களோடு சரிசமமாகவும் ஜனநாயக உரிமைகளுடனும் வாழ வகை செய்யப்பட வேண்டும்.
- யாழ்.மாவட்ட மக்களின் அத்தியாவசிய சேவைகள் அடிப்படைத் தேவைகளைப் பெறுவதில் உள்ள கெடுபிடிகள், சிரமங்கள், வசதியீனங்களைக் களையவும் அவற்றை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.
- உங்கள் மத்தியிலிருந்து சேவையாற்றிவரும் எமது வேட்பாளர்கள் உங்கள் பிரதிநிதிகள் என்ற உரிமையுடன் சேவையாற்ற வாய்ப்பளியுங்கள்.

(95528)

சுயேச்சைக்குழு



X

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.)


## ஊர்வலங்களுக்குத் தடை

நாளைய பொதுத் தேர்தல் வாக்களிப்பு சமயத்தில் வாக்களிப்பு நிலையங்களிலிருந்து ஒன்றரைக் கிலோ மீற்றர்கள் தூரத்துக்குள் கூட்டமாக நிற்பது, அனாவசியமாக நடமாடுவது, வாக்காளர்களை அச்சுறுத்துவது, ஊர்வலம் நடத்துவது போன்றவை தடை செய்யப்பட்டுள்ளதாகவும் -

இதனை மீறுபவர்களுக்கு ஒரு மாதத்துக்குட்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என்றும் -

தேர்தல் பணியகப் பொலீஸ் பொறுப்பதிகாரி காமினி நவரட்ண தெரிவித்தார். (ஒ-4)

## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதற்கிடையில், கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு நகரில் உள்ள தமது அலுவலகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பைக் கண்டித்து ஈ.பி.டி.பி.கட்சி நேற்று அழைப்பு விடுத்த ஹர்த்தாலுக்கு மட்டக்களப்பில் போதுமான ஆதரவு கிட்டவில்லை என்று கூறப்படுகிறது.

போக்குவரத்து உட்பட வழமையான சேவைகள் இடம்பெற்றதாகவும் -

காலையில் மட்டும் சில கடைகள் மூடப்பட்டிருந்தபோதும், முற்பகலில் சகல கடைகளும் திறக்கப்பட்டதாகவும் -

அங்கிருந்து வந்த செய்திகள் தெரிவித்தன. (ஒ-4)

## எது தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கூறியதாகத் தெரியவருகிறது.

சொந்த மண்ணில் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தப் பாடுபடுவது தமிழின உணர்வுக்கு எந்த வகையில் விரோதமானது?

தொடரும் போர்ச் சூழலினால் பாதிப்புக்களைச் சுமந்து வாழும் மக்களின் கண்ணீரைத் துடைக்க முயல்வது எந்த விதத்தில் தமிழின உணர்வுக்கு பாதிப்பானது?

தொடர்ச்சியான இடம்பெயர்வுகளாலும், இழப்புக்களாலும் துன்பங்களைத் தாங்கிச் சலிப்புற்று இந்த மண்ணிலிருந்து - எங்கள் சொந்த மண்ணிலிருந்து - வெளியேறத் துடிப்போருக்கு நம்பிக்கை ஊட்டி வாழ வைப்பது எந்த முறையில் விரோதமானது?

தியாகிகள், மாவீரர்கள் எனப் பெயர் சூட்டி சாவை அரவணைக்கத் தூண்டுவதும், துரோகக் குற்றம் சுமத்தி சுட்டுக் கொல்வதும் எந்த விதத்தில் தமிழ் உணர்வைக் காப்பாற்றுகிறது?

அன்ரன் பாலசிங்கத்தின் கூற்றுக்களாக தெரிவிக்கப்பட்டிருப்பவை மக்கள் மத்தியில் இந்தக் கேள்விகளையே எழுப்பியுள்ளன. புலிகள் தரப்பிலிருந்து சுமார் 18ஆயிரம் பேர் வரையில் சாவை அணைத்துக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இவர்கள் அனைவரும் தமிழ்த் தாய்மார்கள் பெற்றெடுத்தவர்களே. சடலமாகிப் போய்விட்ட இந்த மண்ணின் மைந்தர்களது இழப்பின் துயரம் மக்கள் அனைவருக்கும் பொதுவானது. அதுபோலவே புலிகளால் கொலையுண்டவர்களும் கூட இம்மண்ணின் புதல்வர்களே. இத்தகையோரின் இழப்புக்களும் சோகம் நிரம்பியதே.

எனவே எல்லாத் தரப்பினரும் தத்தம் சோகங்களையும், துயரங்களையும் பகிர்ந்துகொள்ள பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படவேண்டுமென்பதே தேவையானது. அதை விடுத்து, பழிக்குப் பழி, பல்லுக்குப் பல் என்ற வகையில் பழிவாங்கும் உணர்ச்சிகளைத் தூண்டுவதோ, கட்டிப் பிடித்து முத்தம் கொடுக்கப்போவதாகக் கிண்டல் செய்வதோ, கொல்லப் போவதாக எச்சரிக்கை செய்து மிரட்டுவதோ, பொருத்தமானதாக இருக்கப் போவதில்லை.

வாழவேண்டிய இளம் வயதினரைத் தற்கொலைக் குண்டுதாரிகளாக அனுப்பி வைக்கும் இயக்கமொன்றின் வழிகாட்டி, தமது முதுமைப் பருவத்திலும் கூட தமது உடற் சுகவீனத்தையே முதன்மைப்படுத்தி லண்டனில் சுகவாழ்வு வாழ்ந்தபடி வெற்று வார்த்தைகளால் வீரம் பேசுகிறார். இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இத்தகையவர்களின் வெற்று புகழ்ச்சிகள்தான் இம்மண்ணில் வாழும் மக்களது உண்மையான அடிப்படை அபிலாஷைகளைத் திசை திருப்பி வந்துள்ளன என்பதைப் புலிகளின் தலைமையும் உறுப்பினர்களும் புரிந்துகொள்வார்களாயின் வரவேற்கப்படக் கூடியதாக இருக்கும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## சுதந்திரமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைச் சட்டத்தை உருவாக்குபவர்களாகக் கருதமுடியாது என்று தனது உத்தரவில் அவர் குறிப்பிட்டார்.

வவுனியா சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஹேரத், பிரதிப் பொலீஸ்மாஅதிபர் டபிள்யு.எம்.எம். டபிள்யு.தர்மரட்ண ஆகியோருக்கு இட்ட உத்தரவிலேயே இவற்றை நீதிவான் தெரிவத்தார். (ஒ)

## கள்ளவாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்குத் திட்டமிட்டிருக்கிறது.

இந்தக் கள்ள வாக்குப் போடும் பணியில் தனியாருக்குச் சொந்தமான வாகனங்களை ஈடுபடுத்துவதற்கும் அது திட்டமிட்டுள்ளது.

இரண்டாயிரம் ரூபா பணத்துக்கும் ஒரு போத்தல் சாராயத்துக்கும், 20 லீற்றர் டீசலுக்கும் ஆசைப்பட்டு உங்களின் வாகனங்களை அந்தத் தேச விரோத செயலில் ஈடுபடுத்துவதன் மூலம் எமது தமிழ் மக்கள் மேலும் 7ஆண்டுகளுக்கு அடிமைப்பட்டு அல்லற்பட்டு, அடிமை வாழ்க்கை வாழ்வதற்கு துணைபோகாதீர்கள்.

அத்துடன் எமது கட்சி உட்பட எந்தக் கட்சிகளுக்கும் அன்றைய தினம் சேவையில் ஈடுபடவேண்டாம் எனவும் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நாளையதினம் கள்ள வாக்குப் போடும் நடவடிக்கைகளுக்கு ஆள்களை ஏற்றி இறக்கும் வாகனங்களையும், அவற்றின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களையும் கைது செய்வதற்கு கொழும்பில் இருந்து பொலீஸாரின் விசேட பிரிவினர் நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவற்றையும் மீறி அக்கட்சியின் தேசவிரோத நடவடிக்கைகளுக்கு துணைபோகும் வகையில் நாளைய தினம் சேவையில் ஈடுபடும் வாகனங்களின் உரிமையாளர்கள் தேர்தலுக்குப் பின்னர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுவர் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

- இவ்வாறு நாளைய சேவையில் ஈடுபடாமல் விடுவதன் மூலம் தமது வருமானம் இழக்கப்படும் என கருதுகின்ற வாகன உரிமையாளர்கள் ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட அலுவலகத்துடன் தொடர்புகொண்டால் நாளை சேவையில் ஈடுபடாமல் விடுவதன் மூலம் இழக்கப்படும் வருமானம் முழுவதற்கும் நஷ்டஈடு வழங்கப்படும் - என்று தெரிவித்தார். (உ-4)

## மதன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சேபிப்பதாக சட்டமா அதிபரிடமிருந்து அறிவுறுத்தல் கிடைத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களின் நலனைக் கவனிக்க ஆஜரான சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தியும் ஏற்கனவே பிணை அனுமதி வழங்கப்பட்டது தவறு என வாதிட்டார். முன்னதாக அவர் இது விடயமாக சட்டமா அதிபருக்கு முறைப்பாடும் செய்திருந்தார்.

இந்நிலையில் -

நேற்று இந்த விவகாரம் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரிகளான மதனராஜாவோ, நெப்போலியனோ நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரச சட்டத்தரணி மற்றும் சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தி ஆகியோரின் வாதங்களை அடுத்து பிணை அனுமதியை நீதிவான் ரத்துச் செய்தார். இருவரையும் கைது செய்ய உத்தரவிட்டார்.

அத்துடன் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் இரண்டு வாகனங்களையும் கைப்பற்றுமாறு பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

இந்த வழக்குத் தொடர்பான அடையாள அணிவகுப்பை, சம்பந்தப்பட்ட சாட்சிகள் சில நீதிமன்றத்துக்கு வராததால் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்திவைத்தார்.

விளக்கமறியலில் உள்ள மூன்றாவது எதிரி ஜீவனைத் தொடர்ந்து அத்திகதி வரை விளக்க மறியலில் வைக்கவும் அவர் உத்தரவிட்டார். (உ-ஒ-8-100)


### புறோயிலர் விற்பனைக்கு

மலிவு விலையில் புறோயிலர் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

அன்னா பாம்
ஸ்ரேசன் றோட்,
இணுவில். (C/19631)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.12.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.